# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 100 ஐப்பசி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality Renovation Work
0400 287 198


# சத்திய வேள்வி!







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

## INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026



# நீதி மறுக்கப்பட்ட மருத்துவரும்! திருமலை மாணவர் படுகொலையும்!!

• நவீனன்

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் நாள் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் நீதிக்காகப் போராடிய மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரனின் மறைவு, நீதி மறுக்கப்பட்ட சமூகத்தின் பேரிழப்பே.

திருகோணமலை நகரில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டு, 19 ஆண்டுகளாகின்ற போதிலும் இதுவரை நீதிக்காக ஏங்கியபடியே, கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர் வேதனையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்களின் பெற்றோரில் ஒருவர் மருத்துவர் மனோகரன். தனது மகனின் படுகொலைக்கு நீதிகேட்டு தொடர்ந்து போராடி வந்த அவர், தனது மகனுக்கான நீதி கிடைக்காத நிலையில் இறந்துவிட்டார்.

மருத்துவர் மனோகரனுக்கு ஈழத்தில் பல்வேறு இடங்களில் நினைவு வணக்க நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

## படுகொலையும் மூடி மறைப்பும்:

திருகோணமலை பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்கு அருகாமையாக 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதில் மாணவர்கள் பலர் கூடிநின்று கதைத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஓட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் அந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டுக் கோட்டைப் பக்கமாகச் சென்றனர். கைக்குண்டு வெடித்ததில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என்பவர் காயமடைந்தார்.

இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அந்தப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்கு சுமார் பத்து நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

மாணவர்கள் இந்தச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து முழங்காலில் நிற்கவைத்து சுட்டுக் கொன்றனர். இந்தக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் அப்பாவி ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் ஐந்து மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.


இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்ட அப்பாவி மாணவர்களான லோகிதராசா ரொகான், சண்முகராஜா சஜீந்திரன், மனோகரன் வசீகர், தங்கத்துரை சிவானந்தன், யோகராஜா கேமச்சந்திரன் ஆகியோரின் படுகொலைக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பது உலகறியும்.

இந்த அப்பாவி மாணவர்களை படுகொலை செய்தவர்கள் இலங்கை இராணுவமும் கடற்படையினருமே எனவும் தெரிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எதுவுமே எடுக்கப்படவில்லை.

## சர்வதேசக் கண்டனமும் அரசின் உதாசீனமும்:

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் யுத்தம் உச்சமடைந்திருந்த வேளை இடம்பெற்றிருந்த இந்தச் சம்பவமானது மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஒன்று என உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்தும் பேசப்படுகின்றது. சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இலங்கை அரசு மீது வன்மையான கண்டனத்தை அவ்வேளை வெளியிட்டிருந்தனர். ஐ. நா மனித உரிமைகள் பேரவையிலும் இந்தப் படுகொலை இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இடம்பெற்று விவாதிக்கப்பட்டிருந்தது.

**திருகோணமலை ஐந்து மாணவர் கொலைக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது மாத்திரமல்ல, இறுதி யுத்தத்தில் காணாமல் போன, கொல்லப்பட்ட மக்களுக்கு இனி ஒரு போதும் நீதி கிடைக்க மாட்டாது என்றே தமிழ் மக்கள் நம்புகிறார்கள்**



இந்த ஐந்து மாணவர் கொலைக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது மாத்திரமல்ல, இறுதி யுத்தத்தில் காணாமல் போன, கொல்லப்பட்ட மக்களுக்கும் இனி ஒரு போதும் நீதி கிடைக்க மாட்டாது என்றே தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

## தண்டனைக்கு அச்சமின்றிய குற்றங்கள்:

தண்டனைக்கு அச்சமின்றி குற்றச்செயல்களை நிகழ்த்தும் போக்கினை எடுத்துக் காட்டும் ஒரு குறியீட்டுச் சம்பவமாக இந்தத் துயரநிகழ்வு இருந்து வருகின்றது. கொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் மனோகரனின் துணிச்சல் காரணமாக இந்தச் சம்பவம் பிரபல்யமடைந்தது. இந்தக் கொலையில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தை மருத்துவர் மனோகரன் அறிந்திருந்ததுடன், இது தொடர்பாக தொடக்கத்தில் நடத்தப்பட்ட ஒரு விசாரணையில் அவர் சாட்சியமளித்திருந்தார்.

திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களுக்கும் நீதியைக் கோரும் முயற்சியில் உள்ளூர்ச் செயற்பாட்டாளர்களுடன், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இணைந்திருந்தன. இந்தச் சம்பவம் பரவலான விதத்தில் கவனத்தை ஈர்த்திருந்தது.

## இனவாத நீதித்துறை:

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக வினைத்திறன் மிக்கவிதத்தில் புலன்விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென 2007ஆம் ஆண்டின் ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. மேலும், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் இது தொடர்பாக மீண்டும் மீண்டும் பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. இவற்றுக்கு மத்தியிலும் கூட, இந்த விசாரணைகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வந்துள்ளன.

இந்த வழக்கு திருகோணமலை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆமை வேகத்தில் இடம்பெற்றுவந்த நிலையில், சந்தேக நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்து, பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். அதன் பின்னர் போதியளவில் சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் இது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சந்தேகநபர்கள் விடுவிக்கப்பட்டதாக சிறிலங்கா அரசு அறிவித்தது.

நீண்ட காலமாக இக்கொலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பொறுத்தவரையில் இந்த விசாரணைகள் சிறிலங்கா குற்றவியல் நீதித்துறை தொடர்பான தமது நம்பிக்கையை தகர்த்தெறிந்த ஒரு விடயமாகவே இருந்து வந்துள்ளது.

## சிறிலங்கா அரசின் உண்மை முகம் :

கொல்லப்பட்ட அப்பாவி மாணவர்களின் உடல்களைப் பரிசோதித்த சட்ட மருத்துவ அதிகாரி, இறந்த மாணவர்களின் உடல்களில் துப்பாக்கிச் சூடுகள் காணப்பட்டதாகவும், இவர்கள் மிகக்கிட்டிய தூரத்தில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார்.

எல்லைகளற்ற செய்தியாளர்களின் தகவலின் படி, படுகொலை செய்யப்பட்ட மாணவர்களைப் புகைப்படங்கள் எடுத்ததாகக் கூறப்படும் தமிழ் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் துணை இராணுவப் படையினர் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களால் 2006 ஜனவரி 26ஆம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இப்படுகொலைகள் குறித்த அதிகாரபூர்வ விசாரணைகள் முழுமையாக நடைபெறவில்லை. இது குறித்து சிறப்பு அதிரடிப் படையினர் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அரசின் கண்துடைப்பாக இது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 12 விசேட அதிரடிப் படையினர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 2013 ஜூலை 5 அன்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை ஓகஸ்ட் 5 வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டது. கைது செய்யப்பட்ட அனைவரும் 2013 ஒக்ரோபர் 14 ஆம் நாள் திருகோணமலை நீதவானால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அப்பாவி மாணவர்கள் மீதான இப் படுகொலைகள் இடம்பெற்று பத்தொன்பது ஆண்டுகள் கடந்துள்ள போதும் இதுவரையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமையானது சிறிலங்கா அரசின் உண்மையான முகத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. ■


GOLDEN CASTLE FUNCTION CENTRE
GOLDEN CASTLE FUNCTION CENTRE
An initiative from
Red Chillies
GOLDEN
CASTLE
FUNCTION CENTRE
• Wedding
• Engagement
• Holy Communion
• Birthday Parties
• Live Events
• Gathering
• Christening
35 Somerville Rd
Hampton Park, VIC 3976
IF YOU ARE LOOKING FOR
THE PERFECT PLACE
TO CELEBRATE YOUR EVENTS
Contact us
0414 726931
0412 914879

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 100 ஐப்பசி 2025 தொ.பே:1800 960162

## குற்றவுணர்ச்சிக்குள்ளாக்கும் நினைவுத் தூபிகள்

செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி இவ்வருடத்தின் நடுப்பகுதியில் நடத்தப்பட்ட அணையா விளக்குப் போராட்டமானது, மிகப்பெரிய மக்கள் திரட்சியைக் காட்டியிருந்தது. அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு, ஒருமித்த குரலில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர்.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக ஒளிர்ந்த அணையா விளக்கின் சாட்சியத்தோடு இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் இறுதிநாளில், இலங்கை வந்திருந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அணையா விளக்குப் போராட்டத்திடலுக்கு வருகை தந்தார். அங்கு ஒளிர்ந்து கொண்டிருந்த அணையா விளக்கிற்கு மலர் தூவி அஞ்சலியும் செலுத்தினார். தமிழர்கள் நீதிகோரி நடத்துகின்ற போராட்டமொன்றில், ஐ.நா போன்ற சர்வதேச அமைப்பொன்றின் பிரதிநிதி நேரடியாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துவது முக்கியமான விடயமாக அப்போது பேசப்பட்டது.

அந்தவகையில்தான் அணையா விளக்கு போராட்டத்தின் நினைவாக அப்போராட்டம் இடம்பெற்ற இடத்தில் நிரந்தரமாக அவ்விளக்கு அமைக்கப்பட்டது. அது அமைக்கப்பட்ட பின்னர், செம்மணி வீதியால் செல்லும் சுற்றுலாப் பயணிகள், தெற்கை சேர்ந்தவர்கள், புலம்பெயர் தமிழர்கள் என அனைவரும் அவ்விடத்தில் இறங்கி, விளக்கினை பார்த்துச் சென்றனர். செம்மணி குறித்த செய்தியைக் கேட்டறிந்துகொண்டனர். எனவே அணையா விளக்குடன் இணைந்த வகையில் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வரலாறும் அவ்விடத்தில் நினைவுத்தூபியாகவோ, ஓர் கண்காட்சிக் கூடமாகவோ அமைக்கப்படவேண்டிய தேவையை அணையா விளக்கு தூபி உணர்த்திக்கொண்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த 09.10.2025 அன்று அணையா விளக்கு தூபி இனந்தெரியாத நபர்களால் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது. நீதியின் தேவையை வலியுறுத்தி நின்ற சிறு நினைவுத்தூபியைக்கூட விட்டுவைக்க விரும்பாத விசமிகளின் வேலையாக இது இருக்கக்கூடும். ஆயினும், அணையா விளக்கு நினைவேந்தல் தூபி அமைக்கப்பட்டிருந்த இடத்தில் மீண்டும் முன்பை விடப் பலமான வகையில் அணையா விளக்குத் தூபி மீளவும் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பாகங்களில் இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பிற்கு சாட்சியமாகக் கூடியவகையில் பல்வேறு இடங்களிலும் தமிழர்கள் நினைவுத் தூபிகளை அமைத்திருக்கின்றனர். மிகுந்த அச்சுறுத்தல்கள், விசாரணைகளுக்கு மத்தியில், சிறியளவில் அமைக்கப்பட்ட இந்த நினைவுத் தூபிகள் இனந்தெரியாத நபர்களினால் அடித்துநொருக்கவும் பட்டுள்ளன. முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவுத் தூபி, யாழ்.பல்கலையில் அமைக்கப்பட்டிருந்த இனவழிப்பு நினைவுத் தூபி ஆகியன ஏற்கனவே இவ்வாறு அடித்து நொருக்கப்பட்டிருந்தன. ஆயினும் மக்கள் துரிதமாக செயற்பட்டு அத்தூபிகளை உடனடியாகவே மீளமைத்துவிட்டமை வரலாறாக மாறியிருக்கிறது.

இவ்வாறு இனந்தெரியாத நபர்கள் தமிழ் இனவழிப்பின் சாட்சியாக உருவாக்கப்படுகின்ற நினைவுத் தூபிகளை அடித்து நொருக்குவதன் பின்னால் தெளிவானதொரு அரசியல் நிகழ்ச்சி நிரல் உண்டு. நினைவுத் தூபிகள் வாய்பேசாவிடினும், அவை உணர்த்துகின்ற அரசியல் மிக வலிமையானது. ஒரு பொது இடத்தில் சிலையாக நிற்கும் நினைவுத் தூபி, தமிழ் இனவழிப்பின் வரலாற்றை அவ்விடம் வந்துபோகின்ற எல்லோர்க்கும் சொல்லிக்கொண்டிருக்கிறது. சந்ததி கடத்திக்கொண்டிருக்கிறது. இனவழிப்பின் சாட்சியமாக எந்தத் தடயமும் இருக்கக்கூடாது என்பதில் விழிப்பாக இருக்கின்ற இலங்கை அரசு இதனை மாத்திரம் எங்கனம் விட்டுவைக்கும். மனித குலமே வெட்கித் தலைகுனியும்படியாக பாரிய குற்றத்தைப் புரிந்துவிட்டிருக்கிற சிங்கள அரசுக்கு இந்த நினைவேந்தல் தூபிகள் பெருங்குற்றவுணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. எனவேதான் குற்றவுணர்ச்சி மேலிட, தான் கட்டமைத்துவைத்திருக்கின்ற இனந்தெரியாத நபர்களைக் கொண்டு நினைவேந்தல் தூபிகளை அடித்து நொருக்கி விடுகின்றது.

# மாண்டவீரர் கனவு பலிக்கும் மகிழ்ச்சிக்கடலில் தமிழ் மண் குளிக்கும்!

## பொங்குதமிழ் -2025 அதைச் செய்யும்




**மெல்பேர்ணில் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி பொங்கு தமிழ் நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர் எதிரொலிக்கு வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

**நேர்கண்டவர்: ஜெ ஜெ**

**கேள்வி: இப்போது ஏன் பொங்குதமிழ்..?**

**பதில்:** *எமது தாயக விடுதலைப் போரின் தமிழ் மக்களின் பங்களிப்பைக் காட்டும்முகமாக பொங்கு தமிழ் நிகழ்வு முதன்முறையாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் 2001 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு வரை எமது தாயகத்தில் தமிழ் மக்களின் பங்களிப்போடு மிக எழுச்சிகரமாக நடைபெற்றது அதன் தொடர்ச்சியாகவே சர்வதேச நாடுகளில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சில இடங்களில் நடைபெற்றது இவ்வாறு நடைபெற்ற பொங்கு தமிழ் மக்கள்எழுச்சி நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவே மெல்பேர்ணில் பொங்கு தமிழ் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம்.*

*எமது தாயகத்திலே எமது தமிழினம் கடந்த 75 வருடங்களுக்கு மேலாக சிங்களப் பேரினவாத அரசால் திட்டமிட்ட, கட்டமைக்கப்பட்ட இன அழிவுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது அதற்கு எதிராக முதல் 30 வருடங்கள் அரசியல் ரீதியில் போராடி பயனற்ற நிலையில் தான் எமது ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது*

*அந்த ஆயுதப் போராட்டமானது -2009 இல் மண் மீட்பு விடுதலைக்கான யுத்தம் -சர்வதேச சதிகளால் மௌனிக்கப்பட்டு எமது தமிழினம் கடந்த 16 வருடங்களாக அடிமையாக்கப் பட்டுள்ளது.*

*எமது மண் மீட்புக்கான அத்தனை முயற்சிகளும் தேக்க நிலையிலே உள்ளன.*

*நாம் எமது விடுதலைக்காக கொடுத்த அளப்பரிய எண்ணற்ற தியாகங்களுக்கு இன்று நிலையில் எமது தமிழினம் வெறும் கையறு நிலையிலே உள்ளது .*

*உலகத்திலேயே அடிமைப்பட்டு போய் சிதைக்கப்பட்டு பல்வேறு தேசங்களில் அடிமைகளாக, அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழராகிய நாம் எமக்குள்ளே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒன்று சேர்ந்து, ஒற்றைக் குரலாய் நின்று மக்கள் எழுச்சி ஒன்றை வெளிப்படுத்துவதன் மூலமே எமது விடுதலையை தற்காலத்தில் சாத்தியப்படுத்த முடியும். இந்த அடிப்படையிலேயே பொங்குதமிழ் நிகழ்வை இந்தக் காலகட்டத்தில் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம் .*

**கேள்வி: நாம், நாம் என்கிறீர்களே மக்களுக்கு எவ்வாறு உங்களை அடையாளப்படுத்த போகிறீர்கள்..?**

**பதில்:** *ஆஸ்திரேலிய மண்ணில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மக்கள் இணைந்தே இந்தப் பொங்குதமிழ் நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளளோம். ஆகவே தமிழ் இளையோராக எம்மை அடையாளப்படுத்துவோம்,*

**கேள்வி: இதுவரை இடம்பெற்ற இரண்டு பொங்குதமிழ் நிகழ்வுகளுமே தமிழர்களின் அரசியல் அபிலாசைகளான மரபுவழித் தாயகம், தமிழ்த்தேசியம், சுயநிர்ணயம் ஆகியவற்றை வலுவாக வெளிப்படுத்தியுள்ளன. இந்த பொங்குதமிழ் அவ்வளவுக்கு ஆழமானதாக அமையுமா?**

**பதில்:** *ஆம் நிச்சயமாக. ஈழத்தமிழர் ஆகிய நாங்கள் இந்தப் பொங்குதமிழ் ஊடாக உலகிற்கு மாபெரும் ஒரு பிரகடனத்தை நிகழ்த்த உள்ளோம் . அதாவது ஈழத்தமிழர்களிடையே தமிழ் நிலத்தில் ஒரு சர்வதேசக் கண்காணிப்பில் பொது வாக்கெடுப்பை நடத்தக் கோருவதே அந்தப் பிரகடனம். கடந்த 75ஆண்டுகளுக்கு மேலாக எமது தமிழினத்தை 1948 இல் இருந்து திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்குள் தள்ளிய பிரித்தானிய அரச குடும்பத்துக்கும் அதன் அரசுக்கும் முன்வைப்பதோடு சர்வதேச தலைவர்களுக்கும் வலியுறுத்துவதோடு அந்த வரலாற்றுத் தவறை இழைத்த பிரித்தானிய அரசு தான் இழைத்த தவறை உணர்ந்து எம் மக்களிடையே சர்வதேசக் கண்காணிப்பில் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்துவதின் ஊடாக நாம் எமது தேசத்தை மீட்டு எமது நிலத்தில் உலகில் ஏனைய இனங்களைப் போல் எமது மண்ணில் சுதந்திரமாய் வாழ முடியும் என நம்புகிறோம்.*

**கேள்வி: பொங்குதமிழ் என்றாலே மிகப்பெரும் சனத் திரட்சியைக் காட்டவேண்டும். பொங்குதமிழ் 2025 அதனை எப்படி செய்யப்போகிறது?**

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# மாவீரர் கனவு பலிக்கும் மகிழ்ச்சிக்கடலில் தமிழ் மண் குளிக்கும்!

## பொங்குதமிழ் -2025 அதைச் செய்யும்

**(06ஆம் பக்கத் தொடர்ச்சி)**

**பதில்:** மெல்பேர்ணில் வாழும் பல்லாயிரக்கணக்கான எமது தமிழ் உறவுகள் கலந்து கொள்வார்கள் என நம்புகிறோம் காரணம் இது ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டமிட்ட பாதுகாக்கப்பட்ட ஆஸ்திரேலிய அரச விதிகளுக்கு உட்பட்ட ஒரு வெளியரங்க பொங்குதமிழ் நிகழ்வு . மாறாக யாருக்கும் எதிரான ஒரு வீதி ஊர்வலமோ ஆர்ப்பாட்டமோ அல்ல.

இதில் எமது மக்கள் இலகுவாகப் பங்கேற்கக் கூடிய வகையில் மெல்பேர்ண் நகரின் மத்திய பகுதியான பெடரசன் பகுதியில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி முற்பகல் 10 மணி முதல் 1 மணி வரை ஒழுங்கு செய்திருக்கிறோம். இலகுவாக எல்லோராலும் வந்து சேரக்கூடிய இடம் மற்றும் நேரமாக இருப்பதால் இங்கு வாழும் அனைத்துத் தமிழர்களும் தத்தமது குடும்பத்துடன் வருகை தந்து தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவார்கள் எனக் காத்திருக்கிறோம்

அத்துடன் தங்களைப் போன்ற எமது தமிழின விடுதலையில் ஆர்வம் உள்ள ஊடகங்களும் இந்தச் செய்தியை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்து அதனூடாக எம் மக்கள் இவ்வெழுச்சி நிகழ்வில் பங்கெடுப்பார்கள் என நம்புகிறோம்.

**கேள்வி: 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் ஈழத்தமிழர்கள் சிதறிப்போயுள்ளனர். இந்நிலையில் தாயகத்துக்கு வெளியில் நிகழ்த்தப்படும் பொங்குதமிழானது அனைத்து ஈழத்தமிழர்களினதும் பிரதிநிதித்துவத்தை எப்படி வெளிக்காட்டுமென எண்ணுகிறீர்கள் ?**

**பதில்:** இந்த ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் எழுச்சிக்கு -பொங்கு தமிழ் நிகழ்வுக்கு -தனிநபரோ எந்த ஒரு அமைப்போ தலைமை தாங்க போவதில்லை இது தொடர்பாக எப்போதும் எங்கும் நிதிசேகரிக்கப் போவதில்லை. இங்கு வாழும் ஒட்டுமொத்தத் தமிழர்களையும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளையும் பழைய மாணவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் உள்ளடக்கிய மாபெரும் மக்கள் எழுச்சி. அத்துடன் இதுவரை காலமும் தமிழ் மக்கள் மேற்கொண்ட எழுச்சி நிகழ்வுகளில் இருந்து வித்தியாசப்படுவதால் இந்த மக்கள் எழுச்சிக்கு ஒட்டுமொத்தத் தமிழர்களும் தமக்கிடையில் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து தமிழின விடுதலை என்ற ஒற்றை நோக்கத்தில் அந்த இலட்சியத்தில் ஒரே குடையின் கீழ் ஒன்று சேர்வார்கள் என நம்புகிறோம்.

குறிப்பாக “நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழ்வோம் “என்ற எமது தேசியத் தலைவரின் பொன்மொழிக்கு அமைய அனைத்து தமிழர்களும் இந்த மக்கள் எழுச்சியான மாபெரும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பங்களிப்புக் கொடுப்பார்கள் என நம்புகிறோம்.

**கேள்வி: பொங்குதமிழ் 2025 இல் தமிழ்இனவழிப்பிற்கான நீதியைக் கோருவது ஒரு கோரிக்கையாக முன்வைக்கப்படுகிறது. சர்வதேச ரீதியில் தமிழ் இனவழிப்பை ஏற்றுக் கொள்ளும் நிலமைநிலைமை அருகிவரும் நிலையில் இந்தக் கோரிக்கை எவ்வளவு தூரத்திற்கு தாக்கம் செலுத்தும்?**

**பதில்:** சிங்கள ஏகாதிபத்திய அரசு கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக எமது தமிழினத்திற்கு எதிராக மேற்கொண்ட திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு வரலாற்றுச் சான்றுகள் எம் முன்னே உண்டு

அதன் அடிப்படையில் அதிலிருந்து எந்த காலத்திலும் இலங்கை அரசாங்கத்தால் தப்பிக் கொள்ள முடியாது. மேலும் நாங்கள் இந்த மக்கள் எழுச்சிகளின் ஊடாக முன்வைக்கும் கோரிக்கையான சர்வதேசசர்வதேச சர்வதேசக் கண்காணிப்பில் ஈழத்தில் தமிழ் மக்களிடையே ஒரு பொது வாக்கெடுப்பை நடத்த கோரியது. நடத்தக் கோருவோம். அவ்வாறு அதை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக எமது தமிழினம் கடந்த 75 ஆண்டுகளாஆண்டுகளாகச் சந்தித்து வரும் அத்தனை அழிவுகளுக்கும் துன்பங்களுக்கும் முடிவு கட்டுவதோடு, எமது மாவீரர்களின் கனவுகளை நிறைவேற்றி எமது தனித்த சுய ஆட்சிசுயாட்சி கொண்ட சுதந்திர தமிழீழத் தேசத்தை எம் மக்களுக்கு அமைத்துக் கொடுக்க முடியும் என நம்புகிறோம்




**கேள்வி: பொங்குதமிழுக்கென்று ஓர் அரசியல் கனதி அல்லது பெறுமதி உண்டு. பொங்குதமிழ் 2025 ஆனது அந்தக் கனதியை அல்லது பெறுமதியை எப்படி அடையப்போகிறது?**

**பதில்:** பொங்கு தமிழானது எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு மக்கள் வடிவமே. இந்த Melbourne 2025 பொங்கு தமிழ் மக்கள் எழுச்சி மூலம் உலகமெல்லாம் பிரிந்து சிதைந்து வாழும் எமது தமிழினம் தமிழின விடுதலை என்ற ஒற்றை இலட்சியத்தின் கீழ் ஒன்று சேர்ந்து அணி திரளப்போவது நிச்சயம். அத்துடன் நாம் தற்பொழுது 2025 பொங்கு தமிழில் முன்வைக்கும் கோரிக்கையானது எமது மண் விடுதலையை சாத்தியப்படுத்தக்கூடிய விடயமே !

அதாவது எமது இந்த கோரிக்கையை பிரதானமாக மிகப்பெரிய வரலாற்றுத் தவறைப் புரிந்த பிரித்தானிய அரசிடம் முன்வைப்பதோடு உலக நாடுகளிடமும் முன்வைக்கின்றோம். பிரித்தானிய அரசு செய்த தவறுக்கு பரிகாரமாக நாம் கேட்டு நிற்பது தமிழின மக்களிடையே ஒரு பொது வாக்கெடுப்பையே. இதை உலகமெல்லாம் நடக்கவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுகள் ஊடாக வலியுறுத்த உள்ளோம். இவ்வாறு இந்தக் கோரிக்கை மக்களிடையே இருந்து வலுக்குமானால் நாம் எமது மாவீரர்கள் கண்ட கனவான தன்னாட்சியுடன் கூடிய சுதந்திர தமிழின விடுதலையை அடைவது சாத்தியமே.

# SST SPICES & Things




**Indian | Sri lankan | South Asian**
Groceries & Take away

At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!




## 7 days
## 10 am to 8 pm

**SST Spices & Things Where quality meets community**

**Location:**
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020

**Contact:**
03 9417 2517

**Email:**
sstspicesnthings@gmail.com

# மாகாணசபை: வாய்ப்பும் முயற்சியும்

● கருணாகரன்

இலங்கையில் இப்பொழுது தமிழரின் அரசியலில் மட்டுமன்றி, தென்னிலங்கையிலும் பிரதான பேசு பொருளாகி இருப்பது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தான். 'மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்து வதற்கு அரசு ஏன் பின்னடிக்கிறது?' என்று தொடங்கி, 'அதைத் தாமதிப்பது மக்களுடைய ஜனநாயக உரிமையை மீறும் நடவடிக்கை' என்பது வரை பல குரல்கள் தினமும் தென்னிலங்கையிலிருந்து ஒலிக்கின்றன.

அரசியற் கட்சிகள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்பு கள் எனப் பல தரப்பினரும் இணைந்து மேலெழுப்பும் கூட்டுக் குரல் இது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகருமான கரு ஜெயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, தேசிய சமாதானப் பேரவை யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா போன்றோர் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தை வலியிறுத்தியுள்ளனர்.

இவர்களை விட தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதி கள் குழுவொன்றும் "மாகாணசபைத் தேர்தல்களை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும்" என்று கேட்டுள்ளது. இவர்களோடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் தொலவத், முன்னாள் அமைச்சரான புத்திக்க பத்திரன போன்றோரும் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை தனிப்பட்ட முறையில் வலியுறுத்தியுள்ளனர்.

இவற்றோடு தமிழ் முற்போக்குக் கூட்டணியும் மாகாண-சபைத் தேர்தலை வலியுறுத்தியுள்ளது. அந்தக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இந்தக் கோரிக்கையை ஜனாதி பதி அநுரகுமார திஸநாயக்கவிடம் வைத்துள்ளார். அரசாங்கத்தி டம் மட்டும் இந்தத் தரப்புகள் தமது கோரிக்கையை முன்வைக்க வில்லை. இந்தியாவின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி இது தொடர்பான சந்திப்பொன்றை கொழும்பில் உள்ள இந்தியத் தூதருடன் நடத்தியுள்ளது.

அப்பொழுது "மாகாணசபைகளைப் பற்றிப் பேசுவதாயின் அனைத்துத் தரப்பும் இணைந்து வாருங்கள்" என்று இந்தியத் தூதர் சந்தோஷ் ஷா கூறியிருக்கிறார். இதை விட தினமும் கொழும்பிலும் புற நகர்களிலும் மாகாணசபைத் தேர்தலைப் பற்றிய உரையாடல்களும் சந்திப்புகளும் ஊடகவியலாளர் சந்திப்புகளும் நடக்கின்றன.

பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என அனைத்துத் தரப்பும் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை - தேர்தல் திணைக் களத்தை - வலியுறுத்துகின்றன.

அதிகாரத்திலிருக்கும் NPP ஆட்சிக்கு வர முன்பே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் முந்திய ஆட்சியாளர் கள் காலத்தைக் கடத்தி வந்தனர். 2017 க்குப் பிறகு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேயில்லை. அப்போதும் மாகாணசபைத் தேர்தலை நடத்தும்படி தமிழ்த் தரப்பிலிருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆனால், அந்தக் கோரிக்கைகள் பொருட்படுத்தப்படவில்லை.

இப்பொழுது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு கோருகின்ற தரப்புகள்தான் அப்பொழுது ஆட்சியிலிருந்தன. எனவே அவர்களுக்கே இந்தத் தவறில் கூடுதல் பொறுப்புண்டு. அவர்களே இந்தத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்துத் தாமப்படுத்தி, இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்கள். அவர்கள் தங்களுடைய ஆட்சிக் காலத்தில் விட்ட தவறை இப்பொழுது அறுவடை செய்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, மக்களும் பாதிப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது. இருந்தாலும் இப்பொழுது அரசியற் சூழல் மாறி, புதிய ஒரு நிலை உருவாகியுள்ளது. இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவை அனைத்தும் வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள தரப்புகள் என்பது கவனத்திற்குரியது. ஆகவே முன்னெப் போதையும் விட மாகாண சபைகளுக்கான அங்கீகாரத்தை, வலியுறுத்தலை தென்னிலங்கையில் காணக் கூடியதாகவுள்ளது.

இதுவரையிலும் தமிழ்க் கட்சிகள்தான் (அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தவிர) மாகாணசபை விடயத்தைப் பேசி வந்தன. 'மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். மாகாணசபைகளின் அதிகாரங்களை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மாகாணசபை முறையிலிருந்து முன்னகர்ந்து நிரந்தரத் தீர்வுக்குச் செல்ல வேண்டும்' என தமிழ்க்கட்சிகள் வலியுறுத்தி வந்தன. கூடவே 'மாகாணசபை விடயத்தில் இந்தியா கரிசனை எடுக்க வேண்டும். மாகாண சபைகளை முறையாக நடத்துவதற்கு இந்திய அனுசரணையும் அழுத்தமும் வேண்டும்'என்று இந்தியாவிடம் கோரிக்கையை விடுத்தும் வந்தன.

2009 க்குப் பின்னர் முன்வைக்கப்பட்டு வந்த இந்தக் கோரிக்கை 2017 இல் வலுப்பெற்றது. காரணம், 2017 க்குப் பிறகு மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. ஆனால், ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் இரண்டும் ஒழுங்குமுறையாக நடத்தப்பட்டன. இழுபறிக ளோடு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் கூட நடத்தப்பட்டுள்ளன. மாகாணசபைகளுக்கான தேர்தல் மட்டும் நடத்தப்படாமல், மாகாணங்களை ஆளுநர் மூலமாக மத்திய அரசாங்கமே நேரடியாக நிர்வகிக்கிறது.

ஆளுநர் நியமனமும் ஆளுநர்களுடனான நேரடித் தொடர்பும் வழிப்படுத்தலும் கட்டுப்பாடும் ஜனாதிபதியினு டையது. ஆகவே மத்தியின் ஆட்சியே மாகாணத்திலும் நடக்கிறது. ஆனால், மத்தியிலிருந்து மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதே அரசியலமைப்பின் விதியாகும். இங்கே அந்த விதிமுறை மீறப்பட்டுள்ளது.

இதற்கு அரசாங்கம் சொல்கின்ற காரணம் அல்லது சாட்டு, தேர்தலை நடத்துவதாக இருந்தால், எல்லை நிர்ணயத்தைச் செய்ய வேண்டும் என்று. இதை தேர்தல் ஆணையாளரைக் கொண்டு சொல்ல வைத்திருக்கிறது அரசாங்கம். ஏற்கனவே இருந்த அரசாங்கங்கள் (மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க) விட்ட தவறுகளையே தொடருகிறது புதிய (NPP) அரசாங்கமும்.

"தவறுகளைத் திருத்துவதே நம்முடைய வேலை" என்று வந்தவர்கள், அதே தவறுகளின் மீது ஏறிச் சவாரி விடுகிறார்கள்.

உண்மையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு ஒரேயொரு விடயத்தை மட்டும் செய்தால்போதும், தேர்தலை நடத்திவிடலாம்.

"நாடாளுமன்றத்தில் ஒரு எளிமையான திருத்தத்தை நிறைவேற்றுவதன் மூலம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபை தேர்தல்களை நடத்த முடியும் அல்லது எல்லை நிர்ணயத்தை நாடாளுமன்றம் அங்கீகரிப்பதன் மூலம் புதிய முறையின் கீழ் அந்தத் தேர்தல்களை நடத்த முடியும்" என்று தயாசிறி ஜெயசேகரா தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபைகளில் பெண்களுக்கு 30 சதவீதமான ஆசனங் களை ஒதுக்கீடு செய்வதற்காக கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்திற்குள் மாகாண சபைத் தேர்தல் முறையை மாற்றும் நோக்கில் இடைச் சொருகல் செய்யப்பட்ட சில பிரிவுகள் காரணமாகவே தேர்தல்களை நடத்த முடியாமல் உள்ளது. உயர் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப் பட்டதை விடவும் வேறுபட்ட சட்டமூலமே நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது தேர்தலை நடத்துவதில் தேர்தல் திணைக்களத்திற்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது.




இந்தச் சூழலை "தற்போது உள்ளூராட்சித் தேர்தல்களில் கடைப்பிடிக்கப்படுவதைப் போன்று (விகிதாசாரப் பிரதிநிதித் துவ முறையையும் பழைய தொகுதி அடிப்படையிலான முறை யையும் உள்ளடக்கிய) கலப்பு முறையின் கீழ் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்காக எல்லை நிர்ணயக்குழு சமர்ப்பித்த அறிக்கையை நாடாளுமன்றம் நிராகரித்த காரணத்தினாலேயே இன்று வரை தேர்தல்களை நடத்த முடியாமல் இருக்கிறது.

புதியதொரு எல்லை நிர்ணய அறிக்கையை நாடாளுமன்றம் அங்கீரித்தால் மாத்திரமே தேர்தல்களை நடத்தக்கூடியதாக இருக்கும். அதனால் அவ்வாறு செய்வது மீண்டும் தாமதத்தை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகவே அமையும். அதனால், முன்னையதைப் போன்றே முழுமையாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதே தற்போதைக்கு நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும்.

இதற்கான முயற்சியை ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்திலே சுமந்திரன் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பித்து, முன்னெடுத்திருந்தார். ரணிலும் அதற்குத் தொடக்கத்தில் சம்மதம் தெரிவித்திருந்தார். இறுதியாக நாடாளுமன்றத்தில் அதை நிறைவேற்றுவது மட்டுமே பாக்கியாக இருந்தது.

அதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில், தமிழரசுக் கட்சி ரணிலை ஆதரிக்காமல், சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக தெரிவித்ததால், சுமந்திரனின் பிரேரணையை மறுதலித்தார் ரணில் விக்கிரமசிங்க. அதாவது அதை ஒரு அரசியற் பழிவாங்கலாக்கினார் 'இலங்கையின் ஜனநாயக முகம்' என்று வர்ணிக்கப்படும் ரணில்.

இப்பொழுது NPPயின் புதிய ஆட்சி நடக்கிறது. இந்த ஆட்சியிலும் மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் போக்கே காணப்படுகிறது. இதைப் புரிந்து கொண்ட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் இராசமாணிக்கம், சுமந்திரன் கொண்டு வந்த அந்தத் தனிநபர் பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்திருக்கிறார்.

தமிழரசு சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டால் "நாளையேனும் தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணைக்குழு தயாராக உள்ளது" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. அதற்கான அனைத்து வசதிகளும் உண்டு. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆளுந்தரப்பிடம் உள்ளது. அதை விட எதிர்க்கட்சிகளும் இதற்கு ஆதரவைத் தெரிவிக்கக் கூடிய சூழலே உண்டு. ஆனால், அரசாங்கம் அதை இழுத்தடித்துக் கொண்டேயிருக்கிறது.

இதற்கொரு காரணத்தை முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய சொல்கிறார், "மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற குரல்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியே கேட்கின்றனவே தவிர, அவை நாடாளுமன்றத்துக்கு உள்ளே ஒலிக்கவில்லை. இது ஒரு அடிப்படையான பிரச்சினை. மட்டுமல்ல, மக்களுக்கும் மாகாணசபைத் தேர்தலைப் பற்றிய கரிசனை பெரிதாக இல்லை" என்று.

இந்தக்கோரிக்கை நாடாளுமன்றத்தில் ஒலிக்காமல் இருக்கலாம். ஆனால், மக்களுக்கு இதில் ஆர்வம் இல்லை என்று சொல்ல முடியாது. மட்டுமல்ல, மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அரசியலமைப்பின்படியும் ஜனநாயக விழுமியத்தின்படியும் அவசியமான ஒன்று. அதை எப்படி எதன்பொருட்டும் நிராகரிக்கவோ மறுதலிக்கவோ முடியாது. ஆகவே மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டே ஆக வேண்டும்.

இதற்குரிய ஒரே வழி, நாடாளுமன்றத்தில் 05. 06. 2025 அன்று சாணக்கியன் எம்.பி. யினால் சமர்ப்பிக்கப்பட்ட தனி நபர் பிரேரணையை நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும். வேறு சாத்தியமான வழிகளே இல்லை.

இந்தப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நான்கு மாதங்கள் முடிவடைந்து விட்டன. இதைக்குறித்தும் தமிழ் பேசும் சமூகத்தினர் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், நெருக்கடிகளைப் பற்றியும் பேசுவதற்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கித் தர வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி எழுத்து மூலமாகக் கேட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரும்பான்மையைக் கொண்ட தரப்பாக தமிழரசுக் கட்சி உள்ளது. ஆகவே தமிழரசுக் கட்சியின் கோரிக்கையில் ஜனாதி பதி கவனம் செலுத்த வேண்டும். ஆனால், இதுவரையில் அதற்கான அடையாளங்கள் எதுவும் தெரியவே இல்லை.

அரசாங்கம் தடுமாற்றத்தில் இருக்கிறது. அல்லது எதை யும் வெளிப்படையாகப் பேசவோ செய்யவோ விரும்பாமல் அமைதியாக காலத்தைக் கடத்த முயற்சிக்கிறது. இதனால் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவும் படாது. நடத்த மாட்டோம் என்று சொல்லவும்படாது. அதனால்தான் அடுத்த ஆண்டில் மாகாணசபைகளுக்கான தேர்தல் நடக்கும் என்று அமைச்சர்கள் அங்கங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் ஏதேதோ காரணங்களைக் கூறிக் காலத்தை இழுத்தடிப்பார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது.

எதிர்க்கட்சிகள் சொல்வது போல "மாகாணசபைத் தேர்தல்களை நடத்தினால், NPP தோல்வியடையும் என்கின்ற பயத்தினாலேயே தேர்தல்களை நடத்த மறுக்கின்றது" என்பதில் பாதி உண்மை இருந்தாலும் அது மட்டும் காரணமல்ல. NPP (JVP) க்கு மாகாணசபை முறைமையில் நம்பிக்கை இல்லை. அதை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. அதனால் தமது அதிகாரத்தை பிரயோகித்து, அரசியல் யாப்பை மீறி தேர்தல் நடத்தப்படுவதை மறுத்து வருகிறது. இதனை நேர்மையாக மக்களுக்கு சொல்வதை தவிர்த்து வருகிறது NPP. அதாவது சட்டத்தின் ஆட்சி கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

இது ஜனநாயக விரோதமானது மக்களுடைய உரிமைக்கு எதிரானது என்பதை, NPP அரசிற்கு தெளிவாக எடுத்து சொல்லக்கூடிய - வலியுறுத்தக்கூடிய - மக்கள் இயக்கமே இன்று தேவை. அதை மாகாணசபைத் தேர்தலை வலியுறுத்தும் கட்சிகள், அமைப்புகள், ஊடகங்கள், புத்திஜீவிகள் என அனைத்துத் தரப்பும் ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும்.

கடந்த நான்கு மாதங்களாக தமிழ்ப்பரப்பில் மாகாண சபைத் தேர்தல் மற்றும் மாகாணசபை முறையில் உள்ள சாதக அம்சங்களைப்பற்றிய உரையாடல்கள் மக்கள் அரங்கில், மாவட்டங்கள் தோறும் நடக்கின்றன. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இதில் முன்னணிப் பாத்திரம் வகிக்கிறது. இந்த முயற்சியை அது இலங்கை முழுவதிலும் விரிவாக்குவதோடு, மாகாணசபைகளுக்கு ஆதரவான அனைத்துத் தரப்பையும் ஒருங்கிணைப்பது அவசியம் அப்படிச் செய்தால் அது பயனும் சிறப்புமாகும்.

மாகாணசபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அது எப்போதும் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மாகாண சபைகளை இயங்க வைக்க வேண்டும் என்ற கூட்டுக் குரல் இப்பொழுதுதான் ஒலிக்கிறது. இது நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

ஆட்சியிலிருக்கும் NPP அரசாங்கத்துக்கும் இது வாய்ப்பானது. பல்வேறு தரப்பினரும் மாகாணசபையைப் பற்றிச் சாதகமாகப் பேசுவதால், மாகாணசபை முறையை எதிர்ப்புகளின்றி அவர்கள் நடைமுறைப்படுத்தலாம். மட்டுமல்ல, அதற்கான அதிகாரத்தை முழுமையாக வழங்கலாம். அதற்கு அப்பாலும் (13+) செல்லலாம். அதற்கான களச் சூழல் உருவாகியுள்ளது. அல்லது காலம் கனிந்துள்ளது.

அதோ தெரிகிறது, இன்னொரு மைல் கல். கொஞ்சம் முயன்றால் எட்டித் தொட்டே விடலாம்.

# மொழிக்கான போராட்டத்தையும் அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்த வேண்டும்!

## அக்கினிப்பறவைகள் அமைப்பினர்

**புலத்தில் பிறந்த தலைமுறையினரால் உருவாக்கப்பட்ட அக்கினிப் பறவைகள் அடுத்த தலைமுறையினர் (Phinix next genartion) என்ற அமைப்பினர், அண்மையில் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவையொட்டி சத்தியம் என்ற தலைப்பில் நிகழ்வை நடத்தியிருந்தனர். குறித்த நிகழ்வினைத் தொடர்ந்து அவ்வமைப்பின் உறுப்பினர்களான அபிதாரனி சந்திரன் மற்றும் தாரகா சிவசந்திரன் ஆகியோர் எதிரொலிக்கு வழங்கிய நேர்காணல்...**

**நேர்கண்டவர்: ஜெ ஜெ**





**கேள்வி:உங்கள் அமைப்பை ஆரம்பித்தற்கான காரணம் என்ன..? அமைப்பின் கொள்கை என்ன..? உங்கள் அமைப்பு தொடங்கப்பட்டு எவ்வளவு காலம்..?**

**பதில்:** இந்த அமைப்பை ஆரம்பித்தற்கான காரணம், தமிழீழம் - தமிழீழத்தில் நடந்த போராட்டம் குறித்தும் நாம் அடுத்த தலைமுறையினருக்கு ஊடு கடத்த வேண்டும் என்பதற்காகவே. என்றோ ஒருநாள் தமிழீழம் மலரும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது. அதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு.

பீனிக்ஸ் அமைப்பை கடந்த 10 வருடங்களாக நடத்திக் கொண்டிருக்கின்றோம். இந்த அமைப்பு சுவிஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டனிலும் உள்ள இளையோர்களால் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

**கேள்வி: உங்கள் அமைப்பின் ஊடாக நீங்கள் எந்தெந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பீர்கள்..?**

**பதில்:** எங்களின் அமைப்பின் ஊடாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். உதாரணத்துக்கு திலீபன் அண்ணாவின் உண்ணாவிரதப் போராட்டத்தை நினைவுறுத்தி ஒரு நிகழ்வை நடத்தியிருந்தோம். அதேவேளை திலீபன் அண்ணாவின் கொள்கைகள் கோட்பாடுகளை எடுத்து செல்கின்றோம். பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கண்காட்சிகள் போன்றவற்றை செய்து கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் தமிழீழத்திலும் அக்கினிப்பறவைகள் மூலம் சில திட்டங்களைச் செய்வதற்கும் அங்குள்ள மக்களுக்கும் எங்களுடைய வரலாற்றை சொல்லும் வகையில் தொடர்ச்சியான செயற்பாடுகளை செய்வோம்.

**கேள்வி: ஒருவேளை தமிழ்த் தேசியம் சார்ந்த நிகழ்வுகளை நடத்துவதற்கான தடைகள் வந்தால் அதனை எப்படிக் கையாள்வீர்கள்..?**

**பதில்:** தமிழ்த்தேசியம் சார்ந்த நிகழ்ச்சிகளைச் செய்யும் போது பிரச்சினைகள் வரவில்லை. ஆதரவுகளே அதிகமாக இருந்தன.

**கேள்வி: தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவுநாள் குறித்த 'சத்தியம்' நிகழ்வு உருவான விதம் குறித்துச் சொல்லுங்கள்..?**

**பதில்:** தீலிபன் அண்ணாவின் சத்தியம் நிகழ்வு குறித்த எண்ணம் இந்த வருட ஆரம்பத்திலேயே எண்ணக்கருவாக உதித்தது. போனமுறை திலீபன் அண்ணாவின் நினைவு நாளில் நாம் வேறு விதமாக முன்னெடுத்திருந்தோம். இம்முறை எவ்வாறு செய்யலாம் என்று எண்ணும் போது தான் வில்லுப்பாட்டுடன் கதை சொல்ல முயற்சித்தோம். அதேவேளை வில்லுப்பாட்டு எமது கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒருவிடயம்.

ஆகவே அத்துடன் சேர்த்து எமது வரலாற்றை நாடக வடிவிலேயே முன்னெடுத்தோம். இவை அனைத்தும் தமிழ்ப் பாடசாலைகளில் எமது ஆசிரியர்களின் நெறியாள்கையில் செய்திருப்போம். ஆனால் இதை நாமே எமது சிந்தனையில் உருவாக்கி உயிரூட்டியிருந்தோம்.

**கேள்வி: வில்லுப்பாட்டுக்குள் கதைசொல்லும் போது அதனை திரைக்காவியமாக கொண்டு வந்துள்ளீர்கள்..? குறித்த நிகழ்வின் இயக்குநர் யார்..?**

**பதில்:** இதில் இயக்குநர் என எவரும் இல்லை. இந்தக் கருப்பொருள் என்னிடமிருந்து- வந்திருந்தாலும் ஒரு நிகழ்வாக உருவகம் பெறுவதற்கு காரணம் அனைத்து இளையவர்களுமே. பாடல் வரிகள் துவரகன் சந்திரனால் எழுதப்பட்டது. அதுமட்டுமின்றி திரு என்ற தோழரும் எழுதியிருந்தார். முக்கியமான ஒருவரான ஜனனி ஜயமோகன் மற்றும் சௌமியா ஆகியோரின் ஒத்துழைப்புடனேயே வில்லுப்பாட்டில் இடம்பெற்ற சண்டைகாட்சிகள் உருவாகின. ஆகவே அனைவரது ஒத்துழைப்புடனேயே சத்தியம் உருவானது.

**கேள்வி: குறித்த நிகழ்வுக்கான செலவுகள் என்பவற்றை எவ்வாறு கையாண்டீர்கள்..?**

**பதில்:** இந்நிகழ்வை எங்களால் மட்டும் கொண்டு செல்ல முடியாது. நானும் தாரகாவும் பல்கலைகழக மாணவர்கள். ஆகவே நாங்கள் எமது நிகழ்வை நடத்த அனுசரணையாளர்களை கண்டுபிடிக்கவேண்டிய தேவையிருந்தது. மங்கோ ரீ மற்றும் மதுரம் ஆகிய நிறுவனங்களின் அன்பளிப்பே இந் நிகழ்வு அரங்கேறியதற்கு காரணமாக அமைகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)



# மொழிக்கான போராட்டத்தையும் அடுத்த தலைமுறைக்கு ஊடு கடத்த வேண்டும்!



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி: நீங்கள் அனைவரும் இங்கேயே பிறந்துள்ளீர்கள். உங்கள் அனைவரது மனதிலும் தமிழ்த்தேசிய சிந்தனை உருவாக காரணம் என்ன?**

**பதில்:** 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப்போரின் போது ஆஸ்திரேலியாவில் மக்கள் போராட்டம் நடைபெற்றது. இதன்போது எமது பெற்றோர் எங்களை போராட்டக் களங்களுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கிருந்து நாம் எமது பெற்றோரிடம் கேட்ட கேள்விகள் மூலமே நாட்டின் நடக்கும் பிரச்சினைகளை அறிய முடிந்தது. பெற்றோர் போராட்ட வரலாறுகளை சொல்லிக்கொண்டிருப்பார்கள். அது மட்டுமின்றி பரத நாட்டியத்தின் ஊடாக மாவீரர் நாள் மற்றும் தமிழ்த்தேசிய நிகழ்வகளில் பங்கேற்கும் போது நிகழ்ச்சியின் பகுதிகளில் துப்பாக்கி முனையில் துன்புறுத்தல் மற்றும் படுகொலைகள் தொடர்பான காட்சிகளில் பங்கேற்றிருப்போம். அப்படியான காட்சிகள் குறித்து ஆசிரியரிடம் ஏன் போர் ஆரம்பித்தது எப்படி நடந்தது என கேட்கும் போது அது குறித்த விளக்கங்களை ஆசிரியர்கள் தெளிவுபடுத்துவார்கள். அதுமட்டுமின்றி நாமும் தேடிப்படித்தோம்.

**கேள்வி: ஈழத்தமிழர்களுக்காக பல அமைப்புகள் இருக்கின்றன இப்படிப்பட்ட நிலையில் ஏன் நீங்கள் புதிதாக ஒரு அமைப்பை உருவாக்கினீர்கள்..?**

**பதில்:** பல அமைப்புகள் இருக்கின்றன தான். ஆனால் இது இளையவர்களுக்கான அமைப்பு. இளையவர்களால் நிர்வகிக்கப்படும் அமைப்பு. இது அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கப்படும் அமைப்பாக இருக்கும். நாம் பெற்றோருடன் பல நிகழ்வுகளுக்கு போயிருக்கிறோம். பல நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறோம். நாமும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்த வேண்டும்.

மொழி - கலசாரத்தை மட்டும் ஊடுகடத்தினால் மட்டும் போதாது, எமது மொழிக்காகவும் கலாசாரத்துக்காகவும் நாம் போராடியமை எமது அடையாளத்துக்கான முக்கியமான ஓர் அங்கம். ஆகவே இவற்றை எல்லாம் சேர்த்து அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்தக்கூடிய அமைப்பாக இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.


இளையவர்களாகவே முன்வந்து இந்நிகழ்வுகளை நடத்த வேண்டும். உங்களுக்குத் தெரிந்து நடக்கும் போராட்டங்கள் மற்றும் தமிழ்த்தேசிய நிகழ்வுகளுக்கு போய்ப் பாருங்கள். எமது மேடை உங்களுக்காக காத்திருக்கிறது.






எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI





# ஆஸ்திரேலியா தமிழ் ஊக்குவிப்புப் போட்டி - 2025





தமிழ் ஊக்குவிப்பு போட்டி ஆஸ்திரேலியா 2025-இன் தேசியப் போட்டிகள் மெல்பேர்னில், அக்டோபர் மாதம் நான்காம் திகதி நடைபெற்றன. பல மாநிலங்களில் இருந்து 125க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். அதனைத் தொடர்ந்து ஐந்தாம் திகதி. தேசிய மற்றும் விக்டோரிய மாநிலப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வுகளின் சில பதிவுகள்...









# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin




# கரூர் சாவுகள் – கூட்டுக்கொலை பாதகம்

● ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

சுந்தர ராமசாமியின் புகழ்பெற்ற சிறுகதை “பள்ளம்”. இந்தக் கதையில் நமது மக்களின் சினிமாவெறியை மிகநுட்பமாக விவரித்திருப்பார். நமது மக்கள் சினிமா பார்ப்பதற்கு ஓடுவது என்பது காலம் காலமாக நடப்பது. அந்த ஓட்டம் இன்னும் நிற்கவேயில்லை. இந்தக் கதையில் வரும் சிறுவனுக்கு வலது கண் தெரியாது. அவனது அம்மா சினிமா பார்த்துக்கொண்டிருக்கும்போது இந்தச் சிறுவன் தொந்தரவு கொடுத்ததால் அவள் இவனது கண்ணை நோண்டி ஒரு கண் போய்விடும். அவள் அம்மா துயரம் தாளாது தற்கொலை செய்துவிடுவாள். அவளது கண்ணை இவனுக்கு பொருத்தியிருப்பார்கள். அதைப் பற்றிகேட்கும்பொழுது அவன் சொல்வான் “ பார்வை இல்லை. பள்ளம் தான் ரொம்பிச்சு “ என்பான். மிகவும் யோசிக்கவேண்டிய சிறுகதை. நாம் உணர்ச்சிவசமாக எடுக்கும் ஒவ்வொரு தீர்வுகளும் பிரச்சினைகளைத் தீர்க்காமல், பள்ளத்தை மட்டும் நிரப்புகின்றன என்று அதி அற்புதமாகச் சொல்லியிருப்பார். கரூரில் அசம்பாவிதம் நடந்த பிறகு நடக்கும் ஒவ்வொரு விஷயங்களும் எனக்கு இந்தக் கதையையே நினைவூட்டின.

கடந்த வாரம் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் அவர்களின் தேர்தல் பிரசாரத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 40க்கும் மேற்பட்டவர்கள் இறந்துவிட்டனர். ஆனால் கடந்த ஒருவாரமாக என்ன நடக்கிறது. இரு தரப்பினரும் மாறி மாறி ஒருவரையொருவர் எதிரியாக்கி கொண்டு அதில் வெறுப்பினை உமிழ்ந்து வளர்த்து வருகின்றனர். இந்த அசம்பாவித சம்பவத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள் என்பதை நீங்கள் எந்தத் தரப்பில் இருக்கிறீர்கள் என்பதே தீர்மானிக்கிறது என்பதே வெளிப்படையான உண்மை.

இந்தத் துயரச் சம்பவத்திற்கு என்ன காரணம் ? இப்படி செய்திருக்கலாம், அப்படி செய்திருக்கலாம் என்று தொடர்ச்சியாக விவாதம் நடைபெற்று வருகிறது ( அடுத்த திரைப்படம் வெளியாகும் வரையில் தான். பிறகு இட்லிக்கடை நோக்கி ஓடிவிடுவார்கள் ) . கேட்ட இடம் கிடைக்கவில்லை என்கிறார்கள். அவர்கள் கேட்ட இடம் இதை விட அபாயகரமானது என்கிறது அடுத்த தரப்பு. மின்சாரம் நிறுத்தப்பட்டது என்று ஒருவரும், இல்லை அவர்கள் தான் ஜெனெரேட்டர் இயங்கும் விளக்கினை அணைத்தனர் என்கிறது அடுத்த தரப்பு. விஜய் வேனில் ஏறி நின்று பேசியிருந்தால் கூட்டம் கலைந்து போயிருக்கும். வேன் விளக்கினை அணைத்து அணைத்து விளையாடினார் என்று பல்வேறு குற்றசாட்டுகள். தொடர்ச்சியாக சமூக ஊடகங்களில் வரும் காணொளிகளைப் பார்க்கும் பொழுது நமக்கு மனவியாதி வந்து விடும் அளவிற்கு வெறுப்புரைகள் இரண்டு பக்கமும் பரப்பப்படுகின்றன. இவ்வாறான சமயத்தில் தான் நமக்கு காந்தியின் தேவை நமக்கு தேவையாகியிருக்கிறது.

எழுத்தாளர் ஜெயமோகன் சில வருடங்களுக்கு முன்பு “காந்தியம் தோற்கும் இடங்கள்” என்று ஒரு அருமையான உரையாற்றியிருப்பார். அந்த உரையில் காந்தி மூன்று இடங்களில் தோற்கிறார் என்று பேசியிருப்பார். முதலாவது காந்தியம் என்பதே அடிப்படை மனித இயல்புக்கு எதிரான நிலைப்பாடு: அதாவது அவர் அடிப்படை மனித இயல்புக்கு எதிரானவர். அடிப்படை மனித இயல்பு என்பது குழுவாகச் சேர்வது, பிறரை வெறுப்பது, அதன் அடிப்படையில் தங்களை ஒன்றுபடுத்திக்கொள்வது, “நாம்” மற்றும் “அவர்கள்” என்று எப்போதும் எதிரி என்று நினைப்போருடன்ஓயாமல் சண்டையிட்டுக்கொண்டே இருப்பது தான். இதுநாள் வரையில் வரலாறு இவ்வாறுதான் உருவாகி வந்திருக்கிறது. காந்தி, இந்த “நாம்” மற்றும் “அவர்கள்” என்ற பேதத்துக்கு அப்பால் நிற்கிறார். அவர் வெள்ளையருக்கு எதிராக போராடினாலும், பேச்சுவார்த்தைக்காக லண்டன் சென்றபோது, அவரை எதிர்த்துப் போராடியவர்களாலும் மதிக்கப்பட்டார். இந்த அடையாளத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. காந்தி ‘பிறர்’ என்ற அடையாளத்துடன் அணுகக்கூடிய எவர் முன்னாலும் தோற்றுப் போகிறார்.

இதில் அறிவுஜீவி சமூகம் எளிய மக்களின் மீது பழியை ஏவுகின்றது. சினிமாக்காரனை பார்க்க நீங்கள் ஏன் அந்த கூட்டத்தினுள் சென்றீர்கள் என்று. இவர்கள் ஏதோ எந்த சினிமாவும் பார்த்ததில்லை இல்லை எந்த நடிகர் / நடிகையர் பின்னே அலைந்ததில்லை என்று. ஒரு கீபோர்டோ அல்லது அலைபேசியோ இருந்தால் என்ன வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் பேசலாம் என்கிற நிலை (இதில் நான் உட்பட அனைவரும் அடக்கம்). அந்த எளிய மக்கள் என்ன செய்தார்கள்?. தாங்கள் திரையில் ஆராதித்த நாயகனை நேரில் பார்க்க சென்றார்கள். யாருக்காவது தெரியுமா இவ்வளவு கூட்டம் வரும், மிதிபட்டு சாவோம் என்று. அங்கே இருந்த காவல்துறை என்ன செய்தது என்று ? செய்திருக்கலாம். 10000 பேர் கூடும் இடத்தில் அதைவிட மக்கள் திரளும்போது காவல்துறை சரிசெய்திருக்கலாம். ஆனால் நாம் இப்போது கேள்விகள் கேட்பது எளிது. பொதுவாக நமக்கு கூட்ட மேலாண்மை என்பது குறைவு. அதுமட்டுமின்றி நமது மக்கள் பெருங்கூட்டமாக ஆனபிறகு என்ன செய்வார்கள் என்பது யாராலும் எதிர்பார்க்க முடியாது. அங்கே அதுதான் நடந்தது, விஜய் ரசிகர்களை கட்டுக்கடங்காத வன்முறைக் கூட்டம் என்று குறை சொல்கிறார்கள். கழகங்களில் மட்டும் என்ன குறைச்சல்? நீங்கள் செய்யாத ரௌடித் தனமா ? தங்கள் அப்பா மற்றும் உறவினர்கள் செய்ததை பார்த்து வளர்ந்த கூட்டம் அப்படிதான் இருக்கும். இது தவறென்று நாம் சொல்லியிருக்கிறோமா ? இல்லை ஒவ்வொரு பட வெளியீட்டின்போது இவர்கள் செய்யும் கூத்துக்களை ரசிக வெளிப்பாடு என்று தொடர்ந்து ஊக்கம் செய்தது யார் ? . இது தமிழ்நாட்டில் மட்டுமா நடக்கிறது ? நமது படித்த பண்பட்ட மேதாவி அறிவுஜீவிகள் ஒவ்வொரு ரஜினி, விஜய் , அஜித் படங்கள் வெளியாகும்போது அடிக்கும் கோமாளித்தனங்களை பார்த்தல் உங்களுக்கு நன்கு விளங்கும். யார் மேல் தவறு ? இந்த ஒட்டுமொத்த சமூகம் தானே ? பிறகு நாம் எப்படி விஜய் ரசிகர்கள் மேல் மட்டும் குறை சொல்ல முடியும் ?

இந்த அநியாயத்திற்கு நீங்கள் காரணம் இல்லையெனிலும் உங்களுக்கும் கூட்டுப்பொறுப்பு இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்த எளிய மக்களை இப்படி நிலையில் இருப்பதற்கு அவர்கள் மட்டும் காரணமில்லை. நாமும் ஒரு வகையில் காரணம் என்பதை உணர்ந்தால், ஆக்கபூர்வமாக அடுத்த என்ன செய்யவேண்டுமென்பதை யோசிப்போம். யோசிக்க வேண்டும். காந்தியின் வழியும் அதுதான். காந்தியின் வாழ்வில் நண்பன் / பகைவன் என்பதே கிடையாது. பழிதீர்த்து வன்மம் பாராட்டுவதை விட ஆக்கபூர்வமாக என்ன செயலாற்ற முடியும். படிப்படியான செயல்கள் மூலம் இலக்கை நோக்கி அறவழியில் முன்னேற வேண்டும்.


ஒரு அரசியல் கட்சி தலைவராக விஜய் தனது தொண்டர்களை எவ்வாறு வழி நடத்த வேண்டும் என்பதை உணரவேண்டும் ( ஒரு சினிமா நடிகன் என்ற பார்வையிலிருந்து ஒரு தலைவன் என்ற நிலைக்கு முன்னேறி யோசிக்கவேண்டும். நாளைக்கு உங்களுக்கு அதிகாரம் கிடைத்தால் உங்களுக்கும் மற்ற திராவிட கட்சிகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்ற நிலைதான் இப்போதும் உள்ளது. இதை நீங்கள் மாற்றவேண்டும் அல்லது அந்தத் திசையில் செல்ல பணியாற்றவேண்டும் ).

ஒரு அரசாக பொதுமக்களின் பாதுகாப்பிற்கு என்ன செய்யவேண்டும்? வெறுமனே கூட்டத்திற்கு அனுமதி கொடுத்துவிட்டு அசம்பாவிதம் நடக்கும்வரை வேடிக்கை பார்க்கலாகாது . பெருங்கூட்ட மேலாண்மை விதிகள் இயற்றவேண்டும் .அதைக் கடைப்பிடிக்கிறார்களா என்று மேற்பார்வை செய்யவேண்டும். அப்படிச் செய்தோம் என்றால் எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளைத் தடுக்கலாம். ஊடகங்கள் தங்களுக்கு சமூகப்பொறுப்புணர்வு உள்ளது என்பதை உணரவேண்டும். வெறுமனே வதந்திகளைப் பரப்பாமல் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். இதற்கெல்லாம் மேலாக மக்களும் இந்த விதிகளை மதித்து நடக்கவேண்டும். இதெல்லாம் உடனே நடந்துவிட முடியாது. காந்திய வழிமுறை என்பது படிப்படியான அணுகுமுறை. சிறிய வெற்றிகள் ,பல்வேறு சமரசங்கள் வழியே இலக்கை அடைதல். முக்கியமாக, இங்கே அனைத்து தரப்பினருக்கும் அவர்கள் தரப்பு நியாயத்தை எடுத்துரைக்கும்படி வழிசெய்தல் வேண்டும்.

தொடர்ச்சியாக காணொளிகளை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு காணொளியில் விஜயின் ரசிகர் மற்றும் தொண்டர் தனது குழந்தையைத் தோளில் சுமந்துகொண்டு பேசுகிறார் “நான் தளபதி ரசிகன். அவரை பார்க்கத்தான் நாங்க இன்னைக்கு வந்திருக்கோம். அவர் கையால பேர் வைக்கத்தான் என் குழந்தையை தூக்கி வந்திருக்கேன்”என்று சொல்கிறார். அவர் முகத்தில் அப்படி ஒரு நம்பிக்கை , என் தலைவன் என்னை எப்படியும் காப்பாற்றிவிடுவான் என. என்னை நிலைகுலையவைத்து விட்டது. எவ்வளவு நம்பிக்கை அய்யா உங்கள் மேல்? நீங்கள் பதிலுக்கு என்ன செய்யப்போகிறீர்கள்? வசூல்ராஜா படத்தில் கான்சர் நோயினால் சாஹீர் இறந்த பிறகு கமல் அழுவார். ’நான் அவனை ஏமாற்றிவிட்டேன் . அவன் என்னைய கடவுள்னு நம்பிக்கிட்டு இருந்தான். அப்படி இல்லைனு நான் எப்படி சொல்வேன் அவன்கிட்டே?’ என்று. அஜித் தனது ரசிகர்களிடம் சொல்லிவிட்டார். விஜயும் தனது ரசிகர்களிடம் நான் கடவுள் அல்ல என்று சொல்லவேண்டும். சொல்லுவார் என்று நம்புவோம்.

சம்பவம் நடந்த சில மணி நேரங்களுக்குள் கிட்டத்தட்ட 85 மருத்துவர்கள் ,செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் போர்க்கால அடிப்படையில் ஓய்வெடுக்காமல் பணியாற்றியிருக்கின்றனர் மேலும் மருத்துவமனை ஊழியர்களில் சுமார் 90% பேர் அழைக்கப்படாமலேயே வந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். சேலம், திருச்சி மற்றும் நாமக்கல் உள்ளிட்ட அருகிலுள்ள மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 20 முதுகலை மாணவர்கள், காவல்துறை அனுமதியுடன் பிரேத பரிசோதனை செய்ய வரவழைக்கப்பட்டனர். இரவு முழுவதும் உழைத்து, ஞாயிற்றுக்கிழமை பிற்பகலுக்குள் 39 உடல்களின் பரிசோதனைகளை முடித்தனர். ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள், உதவியாளர்கள் மற்றும் துணை ஊழியர்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்து அறுவை சிகிச்சைகளை நடத்தினர். கோவிட்-19க்குப் பிறகு பல ஆண்டுகளாக மருத்துவமனை இதுபோன்ற இக்கட்டான நிலையை எதிர்கொள்ளவில்லை, ஆனால் இதுபோன்ற மகத்தான மனிதர்களை நாம் எப்பொழுதும் கண்டுகொள்வதில்லை. அதைவிட்டு அனைத்து தரப்பினரும் ஒருவரை ஒருவர் மாற்றி குற்றம் சொல்வதிலேயே தங்கள் நேரத்தை செலவிட்டுக்கொண்டிருக்கின்றனர்.

திமுக அரசாங்கம் ஏன் இந்த கோரசம்பவம் நடந்து இத்துணை நாள்கள் ஆகியும் த.வெ.க நிர்வாகிகளை கைது செய்யாமல் இருக்கிறது ?. அவர்களுக்கு பயம். எங்கே கைது செய்தால் இன்னும் பெரிதாக வளர்ந்துவிடுவார்களோ என்று ? . த.வெ.க. நிர்வாகிகள் ஒன்றும் வானத்தில் இருந்து குதித்து வரவில்லை. சட்டத்திற்கு முன்பு எல்லோரும் சமம் என்றால் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. சம்பவம் நடந்த அன்று ஓட்டம் பிடித்த விஜய் அவர்கள் மூன்று நாட்களுக்கு பிறகு காணொளி வெளியிடுகின்றார். அதில் எந்த குற்றவுணர்ச்சியோ ,கழிவிரக்கமோ எதுவும் இல்லை. என் தொண்டர்களின் மேல் நடவடிக்கை எடுத்தால் விளைவுகள் பயங்கரம் என்கிறார். என்ன நடக்கிறதய்யா இங்கே ? நீதிமன்றத்தில் நடந்த புஸ்ஸி ஆனந்த் ,நிர்மல் குமார் முன்ஜாமீன் வழக்கில் நீதிபதி அவர்கள், விஜயின் இந்த மனிதாபிமானற்ற தன்மையை கேள்வி கேட்கிறார். விஜய் தாமதமாக வந்தது தான் காரணம் என்கிறார். என்னவோ தமிழ்நாட்டில் அத்துணை தலைவர்களும் நேரத்திற்கு வந்துபோவது மாதிரி. ஒரு மந்திரி வருவதற்காக நூற்றுக்கணக்கான குழந்தைகளை வெயிலில் நிற்கவைத்தவர்கள் தானே. மொத்தத்தில் தமிழ்நாட்டில் அறம் என்றால் கிலோ என்னவிலை என்ற நிலைமைக்கு சென்றுகொண்டிருக்கிறோம். பச்சைக்குழந்தைகள் மேல் மிதித்து கொன்றவர்கள்தானே நாம். அந்த கூட்டம் நடத்திய நிர்வாகிகள் ,விஜய் ,காவல்துறை ,அதிகாரிகள் .அங்கு கூடிய ரசிகர் வெறியர்கள், ஆண்டாண்டுகாலமாக சினிமா என்ற பெயரில் வெறித்தனத்தை கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துவிட்ட நாம் என்று அனைவரின் கைகளிலும் ரத்தக்கறை இருக்கிறது என்பதை மறக்கமுடியாது. கண்ணை மூடினால் உயிரிழந்த அந்த ஏதுமறியா பிஞ்சு குழந்தைகளின் முகங்கள் என்னை தொந்தரவு செய்கிறது.



# எதிர்ப்பக்கம்



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

## காந்தி கண்ணாடி - கனிந்த பார்வை

இப்பொழுதெல்லாம் கொஞ்சம் உணர்ச்சிகரமாகப் படமெடுத்தால் 'க்ரிஞ்ச்' என்று எளிதில் சொல்லிவிடுகிறார்கள். தொடர்ச்சியான குறைந்த நேர காணொளிகள் (ரீல்ஸ், ஷார்ட்ஸ்) எல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக சமூகத்தை உணர்வின்றி மாற்றி வருகின்றன. இப்பொழுது உள்ள குழந்தைகளுக்கு எல்லாமே மிகை உணர்ச்சி தான். உணர்ச்சிகளை வெளிக்காட்டவும், உணர்ந்து கொள்ளவும் தெரியாத சமூகமாக எப்பொழுதும் பற்றிக்கொள்ளும் துரித மனநிலையில் வாழ்ந்து வரும் இவ்வேளையில் காந்தி கண்ணாடி போன்ற படங்களுக்கு தேவை இருக்கவே செய்கிறது.

எளிய வாழ்க்கை ,மிகப்பெரிய தேவைகள் ஏதுமின்றி மற்றும் யாருடனும் தங்கள் வாழ்க்கையை ஒப்பிடாமல் எப்பொழுதும் சந்தோசமாக வாழும் காந்தி மகான் ( பாலாஜி சக்திவேல்) . ஒரு புறம் எளிய சந்தோசங்களை புறக்கணித்துவிட்டு, தேவைகளை பெரிதாக்கிக்கொண்டு ,பணத்தின் பின்னே ஓடும் கதிர் (KPY பாலா). இவர்கள் இருவரும் சந்தித்துக்கொண்டு பயணிக்கும் சூழ்நிலை உருவாகிறது. அப்பொழுது என்னவாகிறது?கதிருக்கு காந்தியின் கண்ணாடி வழியே புதிய பார்வை கிடைக்கிறது என்பது தான் கதை.

பாலாஜி சக்திவேல் படம் முழுவதும் தன் நடிப்பில் மிளிர்கிறார். மொத்த படத்தையும் தன் தோளில் தாங்கி நிற்கிறார். சின்னச் சின்ன சந்தோசங்கள், வாழ்க்கையைக் கொண்டாடுதல், வெள்ளந்தி மனசு என்று காட்சிக்கு காட்சி மெருகேற்றிக் கொண்டே போகிறார். காந்தி கண்ணாடி அவருக்கு நன்கு ஒத்துப்போகிறது. அவரது கண்ணாடி வழியே காணும் உலகம் மிகச்சிறியது. எல்லோரையும் அன்பால் நனைய வைக்கிறார். மனமொத்த தம்பதியாக அர்ச்சனா அவர்களும் சிறப்பாக நடித்திருக்கிறார்.

KPY பாலாவிற்கு இது மிகப்பெரிய சவால். இதுவரை நகைச்சுவை பாத்திரங்களிலேயே தலைகாட்டியவருக்கு குணச்சித்திர வேடம். எல்லா நேரமும் முகத்தில் ஒரே மாதிரி உணர்ச்சியை காட்டுகிறார் எனும்போதிலும் ஒட்டுமொத்தமாக மனநிறைவு. கதாநாயகியாக நடித்திருக்கிற நமீதா கிருஷ்ணமூர்த்தி அருமை . தமிழுக்கு நடிக்கத் தெரிகிற ஒரு நடிகை கிடைத்திருக்கிறார். இனி வரும் காலங்களில் நல்ல கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டும் . நடிப்பார் என்று நம்புவோம்.

பணமதிப்பிழப்பு காலங்களில் நடந்த கூத்தினை இன்னும் சிறப்பாக காட்சிப்படுத்தியிருக்கலாம். இந்திய அராஜக அரசின் மட்டமான இந்தத் திட்டத்தினால் எவ்வளவு கேடுகள் விளைந்தன என்பதை நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா . இரண்டாம் பாதியில் இன்னும் கொஞ்சம் காட்சிகளின் நீளத்தை குறைத்து, கதாபாத்திரங்களின் மனமாற்றங்களை படிப்படியாக மாறுதல் அடையும் படி செய்திருந்தால் இந்தப் படம் இன்னும் நல்ல படமாக வந்திருக்கும். எல்லா ஜனங்களுக்கும் போய் சேரவேண்டும் என்பதால் சில சமரசங்கள் செய்வதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை. இயக்குநர் இதனை அடுத்த படங்களில் சரி செய்துவிடுவார் என்று நம்பலாம்.

பாலாஜி சக்திவேல் ஒவ்வொரு முறையும்" அதான் நீ இருக்கேயில்லை " என்று சொல்வது அருமை. இறுதிக்காட்சியில் வரும் வசனம் அவரின் கதாபாத்திரத்திற்கு ஒட்டாவிடினும் வேறு வழியில்லை , வசனம் பார்த்து வளர்ந்த தலைமுறைக்கு வேறு எப்படி விளங்கவைக்க வைப்பது ?

காந்தியின் கண்ணாடி படம் முழுவதிலும் பயணிக்கிறது. உடைகிறது . தவறவிட்டது திரும்பக் கிடைக்கிறது.இடையில் காணாமல் போகிறது. கடைசியில் கண்ணம்மாவின் கையில் தங்கிவிடுகிறது. நாம் அனைவரும் பொருள்முதல்வாத கண்ணாடியைக் கழற்றிவிட்டு , அன்பின் வெளிச்சத்தை கண்டுகொள்ள காந்தி கண்ணாடியின் தேவை இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியம்.

## Kylian Mbappe - பிரபலத்திற்கான விலை

இதுவரை பிரான்சுக்காக அதிகமாக கோல் அடித்தது தியரி ஹென்றி . இவரது சாதனையை தனது 92 ஆவது போட்டியில் முறியடித்த ம்பாப்பே சமீபத்தில் பிரெஞ்சு பத்திரிகையில் (L'Équipe ) ஒரு மனம்திறந்த நேர்காணல் கொடுத்திருக்கிறார். ஒரு கால்பந்து விளையாட்டு வீரராக மட்டுமின்றி தன் மனதில் பட்டதை மனம்திறந்து பேசும் தைரியமும் நிறையவே இருக்கிறது அவருக்கு.

உங்களிடம் பணம் அதிகம் சேரச்சேர அதிக பிரச்சினைகள் வந்து சேரும் என்கிறார். ஏனென்றால் அவர் ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டபோது சமூக ஊடகங்களில் பெரும் சர்ச்சைக்குள்ளானார். அதற்கு முன்னர் விளையாடிய PSG குழுமம் பெரும் குழப்பங்கள் விளைவித்தது. அவருக்குச் சேர வேண்டிய சம்பளத்தை இன்னும் தரவில்லை . அது பற்றி பேசும்போது தனது பெயரை உருவாக்கிய கிளப்பிற்கு தீங்கு விளைவிக்க விரும்பவில்லை என்று கூறினார். "அது என் உரிமை, அது வேலைவாய்ப்புச் சட்டத்தின்படி ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன். அந்த ஒப்பந்தப்படி எனக்கு சம்பளம் வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன். PSG மீது எனக்கு எந்த விரோதமும் இல்லை, அந்த கிளப்பை நான் நேசிக்கிறேன், அங்கே எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள், ஆனால் எனக்குக் கிடைக்க வேண்டியதை அடைவதற்கான ஒரே வழி ( நீதிமன்றத்தில் வழக்கு மூலமே கிடைக்கும் நிலை) இது நான் வியர்வை சிந்தி சம்பாதித்த காசு. நான் எப்படியும் அடைந்தே தீருவேன்" என்கிறார்.

"ஸ்டேடியத்திற்குச் செல்லும் மக்கள் கால்பந்து விளையாட்டு போட்டிகளை மட்டும் பார்க்கிறார்கள். ஆனால் திரைக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்று தெரியாமல் இருப்பதே அதிர்ஷ்டம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். உண்மையைச் சொன்னால், எனக்கு மட்டும் இந்த கால்பந்தின் மீதான வெறித்தனமான ஆர்வம் மட்டும் இல்லையென்றால், இந்த உலகம் நீண்ட காலத்திற்கு முன்பே என்னை வெறுப்பேற்றியிருக்கும்." என்கிறார்

எந்த அளவிற்கு அவர் வெறுப்படைந்திருந்தார் என்றால் இந்த மாதிரி பேசியிருக்க முடியாது "நாங்கள் வாழும் உலகம் அதுதான், அதை நாம் மாற்ற முடியாது. என் குழந்தை கால்பந்து உலகில் அடியெடுத்து வைக்க நான் ஒருபோதும் அறிவுறுத்த மாட்டேன்." என்று விரக்தியுடன் பேசியிருக்கிறார்

ஆனால் எவ்வளவு விமர்சனங்கள் வந்தாலும் அதை தாங்கிக்கொள்ள வேண்டியது வீரர்களின் கடமை என்கிறார் "நீங்கள் உங்கள் நேரத்தை விமர்சனங்களுக்காக போராடி-னால் நிறைய சக்தியை வீணாக்குகிறீர்கள், நீங்கள் ஒருபோதும் வெற்றி பெற மாட்டீர்கள். சிறந்த பிரெஞ்சு விளையாட்டு வீரர்களைப் பார்க்கும்போது, அவர்கள் அனைவரும் ஒரு கட்டத்தில் பொதுமக்களின் விமர்சனக் கருத்துக்களால் கிழிக்கப்பட்டிருக்கிறார்கள். இது உங்களை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டியதேவையான விமர்சனம் என்று நான் நினைக்கிறேன், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்." என்றும் சொல்லியிருக்கிறார்

எவ்வளவு பிரபலமான விளையாட்டு வீரர்களும் தங்கள் பிரபலத்திற்குண்டான விலையைக் கொடுத்தே தீரவேண்டும். ம்பாப்பே-வின் விளையாட்டு வாழ்வில் இது முக்கியமான கட்டம். இதையெல்லாம் தாண்டி வந்து களத்தில் சாதிக்கவேண்டும். சாதிப்பார் என்றே நம்புவோம்.

## தாராள வளர்ச்சியின் கோரமுகம்

ஜெயமோகனின் வடகிழக்கும் இனவாதங்களும் என்ற காணொளியைப் பார்த்தேன். அந்த காணொளியில் எவ்வாறு இந்தியாவில் வடகிழக்கு மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சி அடைந்தன என்பதையும் ,அதனால் இந்த மாநிலங்களில் பாஜக தொடர்ச்சியாக தேர்தலில் வெற்றி பெறுகிறது என்பதைப் பற்றியும் பேசியிருக்கிறார். பாஜக ஆட்சிக்கு வந்தபிறகு அவர்கள் நெடுஞ்சாலைகளையும்,விமான நிலையங்களையும் திறந்தனர். ஏனென்றால் தாராளமயமாக்கல், பொருளாதார வளர்ச்சியின் காரணமாக நடுத்தர வர்க்கம்,மத்திய தரவர்க்க மக்களிடம் பணம் புழங்கியது. கையில் பணம் இருக்கையில் மக்கள் சுற்றுலா பயணம் செய்ய தேவையான எல்லா வசதிகளையும் இந்த நெடுஞ்சாலைகள் ஏற்படுத்திக்கொடுத்தன. அவர்கள் மேல் எவ்வளவு குறை சொன்னாலும் , கடந்த பத்து வருடங்களில் எத்துணை சாலைவசதிகள் ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றனர் (அதன் பின்னே பகாசுர சுங்கவரி கட்டணம் இருக்கிறது . அந்த அரசியலின் பின்னே போகவில்லை ). இங்கே பாக்டோக்ரா விமான நிலையம் எவ்வாறு வடகிழக்கு மாநிலங்களை வளர்ச்சிக்கு வித்திட்டது என்பதையும், அங்கே பத்து வருடங்களில் பாஜக எவ்வாறு அசைக்க முடியாத சக்தியாக வளர்ந்திருக்கிறது என்பதையும் பார்க்க முடிகிறது. எங்கெல்லாம் தாறுமாறாக வளர்ச்சி ஏற்படுகிறதோ அங்கே இனவாதம் தலைதூக்கும். அந்த இனவாதமே பிறகு அழிவுப்பாதைக்கு வழிவகுத்துவிடும் என்கிறார். நாம் யோசிக்க வேண்டிய நேரமிது. நாடு பொருளாதார வளர்ச்சி அடையும் நேரத்தில் இனவாதம், மதவாதம் போன்ற பிரிவினைகள் நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஆட்சியாளர்களின் கடமை.

## புகழ்பெற்ற எழுத்தாளர் நித்திய திரையைத் (Mtuzh) தாண்டி சென்றுவிட்டார்

இந்தியாவின் மிகச்சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான எஸ். எல். பைரப்பா காலமானார். அவர் ஆவரணம், க்ரிஹபங்கா, பர்வா, வம்சவ்ரிக்ஷா போன்ற காலத்தால் அழிக்க முடியாத நாவல்களை எழுதியிருக்கிறார்.

நான் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு பெங்களூரில் வாழ்ந்தாலும், அவரை நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. அப்போது எனக்கு கன்னட இலக்கியம் பற்றி தெரியாது. எஸ். எல். பைரப்பாவை நான் எப்படி அறிந்தேன்? எழுத்தாளர் ஜெயமோகன் மற்றும் சக ஜெமோ ரசிகர்கள் மூலம் அவர் தமிழ் வாசகர்களுக்கு (பெரும்பாலானவர்கள், குறைந்தபட்சம் எனக்கு) அறிமுகமானார். பின்னர் நான் அவரது சில புத்தகங்களின் தமிழ் மொழிபெயர்ப்புகளைப் படிக்க ஆரம்பித்தேன்.

நான் படித்த முதல் நாவல் "கிரிஹபங்கா"( ஒரு குடும்பம் சிதைகிறது ). இது ஏறக்குறைய அவரது சுயசரிதையாகும். இது வறுமை, நோய், மோசமான உறவினர்கள் மற்றும் அவரது காலத்தின் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடிய ஒரு வலிமையான பெண்ணின் கதை, நஞ்சம்மா (முன்னணி பெண் கதாபாத்திரம்). ஒவ்வொரு முறையும் வாழ்க்கை அவளை துரத்திய போதிலும் துணிச்சலுடன் போராடி வெற்றி பெறுகிறாள். ஆனால் இறுதியில், மாரம்மா தேவியின் சாபம் காரணமாக அவளுடைய குடும்பத்தின் மீது பிளேக் நோயின் வடிவத்தில் வந்து தாக்கி, அவள் மிகவும் கடினமாக உழைத்து உருவாக்கிய அனைத்தையும் அழித்துவிடுகிறது. கண்டிப்பாக படிக்க வேண்டிய நாவல்.

என் கருத்துப்படி, அவரது மிக முக்கியமான படைப்பு திரை (ஆவரணம்). இது ஒரு துணிச்சலான மற்றும் வரலாற்று சிந்தனையைத் தூண்டும் நாவல், இது நாம் இதுவரை நம்பிய அனைத்து வரலாற்றுக் கதைகளையும் கேள்விக்குள்ளாக்குகிறது மற்றும் அமைப்புகளால் நிறுவப்பட்ட கருத்துக்களை (குறிப்பாக கம்யூனிஸ்டுகள் எழுதிய வரலாறு) சவால் விடுக்கிறது . இந்தக் கதை கலாசார மற்றும் அரசியல் விவாதங்களுடன் தனிப்பட்ட வாழ்வில் நடந்த துயரங்களுடன் பயணிக்கிறது. இந்த நாவலுக்காக அவர் பிரிட்டிஷ் பதிவுகள் மற்றும் பிற ஆவணங்கள் மூலம் இந்திய வரலாற்றை ஆராய்ந்து, அந்த நாட்களில் என்ன நடந்தது என்பதற்கான உண்மையான வரலாற்று சித்திரத்தைக் கொண்டு வந்துள்ளார். கதை விவரிப்பு இன்னும் சிறப்பாக இருக்கும். தவறவிடக்கூடாத நாவல்.

அவரது வம்சவ்ருக்ஷத்தை தமிழில் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அடுத்த முறை நான் இந்தியா வரும்போது நிச்சயமாக இந்த தமிழ் மொழிபெயர்ப்பை வாங்குவேன். "பர்வா"வும் மற்றொரு நல்ல புத்தகம்.

பைரப்பா துணிச்சலானவர். அவரது வாழ்க்கையிலிருந்து சில சம்பவங்களை நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவர் பி.ஏ (தத்துவம்) சேர முயன்றபோது, நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், அவரது பேராசிரியர் அவரிடம், "தத்துவம் ரொட்டி சுடுவதில்லை, தயவுசெய்து வேறு ஏதாவது பாடத்தைப் படியுங்கள்" என்று கூறினார். ஆனால் அதற்கு அவர் , "தத்துவம் ரொட்டி சுடவில்லை என்றால், நான் ஒரு பேக்கரியைத் திறந்து என் ரொட்டியைச் சம்பாதிப்பேன்!" என்று பதிலளித்தார். அவர் பாரபட்சமற்ற நேர்மையான வரலாற்றின் மீது தீவிர நம்பிக்கை கொண்டவர். ஔரங்கசீப் இந்துக் கோயில்களை இடித்திருந்தால், அதை நம் பாடப்புத்தகங்களில் மறைக்கக்கூடாது. ஆனால் இந்திரா காந்தி அரசாங்கத்தின் போது ஒரு பாடப்புத்தகக் குழுவில் இதை வலியுறுத்தியதற்காக அவர் குழுவிலிருந்து நீக்கப்பட்டார். நினைவில் கொள்ளுங்கள், அவர் ஒரு சங்கி அல்ல.

அவருக்கு ஞானபீட விருதை வழங்காததற்கு நாம் வெட்கப்பட வேண்டும் (ஆரம்பகாலங்களில் இந்த விருது பெற்றவர்களில் சிலரின் தகுதியை நான் கேள்விக்குள்ளாக்குகிறேன்). அவருக்கு அதிக பாராட்டுகள் கிடைக்கவில்லை, இருப்பினும் அவர் இன்னும் தகுதியானவர்.

இந்த அஞ்சலி இடுகையை முடிக்க அவரது புத்தகத்திலிருந்து பிரபலமான வரிகளில் ஒன்றை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:

"நமது முந்தைய தலைமுறையினர் செய்த தவறுகளுக்கு நாம் பொறுப்பல்ல. இருப்பினும், நாம் அவர்களுடன் நம்மை ஈடு செய்துகொண்டு அவற்றை சரி செய்யாமல் ,அவர்களின் வாரிசுகளாகக் கருதினால், அவர்களின் தவறுகளுக்கான பொறுப்பையும் பகிர்ந்து கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்."

உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும் , எஸ்.எல். பைரப்பா.

## மிகை உணர்ச்சியும், பகுத்தறிவும்

தமிழ்நாட்டில் பலகாலமாகவே தவறாகப் பயன்படுத்திவரும் சொல் எதுவென்றால் அது பகுத்தறிவு தான். நம்மவர்களுக்கு அனுபவத்தின் வழி அறிவதற்கும் ,அறிவியலுக்கு நிறையவே வித்தியாசம் உண்டு என்பதைத் தெரிந்துகொள்ளப் போவதில்லை.

அறிவியல் என்பது என்ன? ஒரு முற்கோளை / கருதுகோளை (hypothesis) முன்னிறுத்துவது. அதை தொடர்ந்து சரி என்று உலகமெங்கிலும் உள்ள வல்லுநர்களால் தொடர்ச்சியாக அந்த முற்கோளின் உண்மையை சரிசெய்து கொண்டே வந்து இறுதியில் உண்மை என்று நிறுவுவது . அந்த வாதம் கூட அந்த நாள் வரையில் தான். இன்னொரு நாள் அந்த கருதுகோள் தவறென்று யாரேனும் நிரூபித்தால் அதை நாம் ஏற்கத்தான் வேண்டும் .ஏனென்றால் அறிவியல் என்பது முன்னே சென்று கொண்டிருப்பது. இதற்கு முன்னர் சரி என்றிருந்ததை தொடர்ந்து சோதனை செய்து சரி / தவறு என்று நிறுவிக்கொண்டே செல்வது.

இங்கே என்ன நடக்கிறது பகுத்தறிவு என்ற பெயரில் , மிகை உணர்ச்சிகளும் , வெற்று உள்ளீடற்ற கூச்சல்களும். தமிழின் தொன்மையை எந்த சான்றுகளுமின்றி ஏற்றிக்கொண்டு போவது. இரும்பு கிடைத்தது (5000 வருடங்களுக்கு முன்பு என்றெல்லாம்). இங்கு மட்டுமில்லை வடக்கிலும் மகாபாரதத்தின் வயது என்பது 10000 ,20000 என்று ஏற்றிக்கொண்டே போவது. இது அறிவியல் ஆகுமா ? இல்லை என்கிறார் ஜெயமோகன்.

நீங்கள் ஆன்மிகம் மற்றும் மதம் சார்ந்த நம்பிக்கைகளை பகுத்தறிவு என்று கேலி செய்கிறீர்கள். நீங்கள் கூச்சல் போடும் அறிவியல் நிரூபணமற்ற மொழி மற்றும் இனம் சார்ந்த கூற்றுகளை பகுத்தறிவு கொண்டு ஆராய வேண்டாமா என்று கேள்வி கேட்கிறார்.

'Science always run within Principles. it requires systematic proofs for any hypothesis.'


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146

# மெல்பேர்ணில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீட்டு விழா

அவுஸ்திரேலியா, மெல்பேர்ண் மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் இம்மாதம் வெளியிடப்பட உள்ளன.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்", "தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்களின் வெளியீடு எதிர்வரும் ஒக்ரோபர் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது.

வலென் மத்திய கலை மண்டபம்,
வெர்மான்ட் மேல்நிலைக் கல்லூரி,
27-63 மொராக் சாலை, வெர்மான்ட், விக்டோரியா 3133. (Fallon Centre Auditorium, Vermont Secondary College, 27-63 Morack Road, Vermont VIC 3133) எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் மாலை 1600 முதல் 1900 மணி வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வு திருபாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் அறிமுக உரையை திரு. ரமேஷ் பாலா அவர்கள் நிகழ்த்துவார். அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை மெல்பேர்ண் இலக்கிய ஆர்வலர்கள் வழங்குவார்கள். தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள் எனும் நூலுக்கு திரு. ராஜா கருப்பையா அவர்கள் நூலாய்வுரை நிகழ்த்துவார்.

ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும் என்ற நூலுக்கு திருமதி. நித்யா தர்மசீலன் அவர்கள் நூலாய்வுரை நிகழ்த்துவார்.

முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள் குறித்த நூல் ஆய்வை திரு. ஜூட் பிரகாஷ் அவர்கள் நிகழ்த்துவார்.

இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற நூல் குறித்த ஆய்வை திரு. ருத்ராபதி அவர்கள் நிகழ்த்துவார். அத்துடன் இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள் பற்றிய நூலாய்வை திரு. ஆவூரான் சந்திரன் அவர்கள் நிகழ்த்துவார்.

மேலும் தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும் என்ற நூலாய்வுரையை திரு. கிறிஷ்டி நல்லரட்ணம் அவர்கள் நிகழ்த்துவார்.

அத்துடன் இந்நிகழ்வில் மெல்பேர்ண் புகழ் சட்டத்தரணி திரு. ரவிந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றுவார். மெல்பேர்ண் மாநகரில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் ஏற்புரையை நூலாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்துவார்.

## 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை!



உக்ரைன், ரஷ்யப் போரில் உக்ரைனுக்காக போரிட்ட ஆஸ்திரேலியர் ஒருவருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதனை ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பெஞ்சமின் லூயிஸ் என்பவருக்கே ரஷ்ய நீதிமன்றத்தால் இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் கூலிப்படையில் இணைந்ததன் மூலம் ரஷ்யாவின் குற்றவியல் சட்டத்தை அவர் மீறினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர் 2023 ஆம் ஆண்டில் உக்ரைன் படையில் இணைந்து ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்டுள்ளார். இவர் தொடர்பான தகவல்களை ரஷ்ய உளவுப் பிரிவு திரட்டியுள்ளது.

இவர் இன்னும் கைதாகவில்லை. திறந்த விசாரணைமூலம் இந்தத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன், அவர் தேடப்படுவோர் பட்டியலிலும் இணைக்கப்பட்டுள்ளார்.

## நேரடிச் சந்திப்பு!




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸி ஆகியோருக்கிடையிலான இரு தரப்பு நேரடிச் சந்திப்புக்கு நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இரு நாட்டுத் தலைவர்களும் எதிர்வரும் ஒக்டோபர் 20 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடர் அமெரிக்காவில் நடந்துவருகின்றது. இம்மாநாட்டின் போது ட்ரம்ப் பேச்சு நடத்தவுள்ள உலகத் தலைவர்களின் பட்டியலில் ஆஸி. பிரதமரின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

இது பற்றி ஆராய்ந்தபோதே ட்ரம்ப் மற்றும் அல்பானீஸி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு அடுத்த மாதம் நடக்கும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், அமெரிக்கா சென்றுள்ள அரச தலைவர்களுக்கு ட்ரம்ப் வழங்கவுள்ள விருந்துபசாரத்தின்போது ட்ரம்ப், அல்பானீஸி நட்பு ரீதியில் சந்திக்கக்கூடும் எனத் தெரியவருகின்றது.

## எதிர்க்கட்சித் தலைவருக்கு அக்கினிப் பரீட்சை!



எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து சூசன் லே வை நீக்க வேண்டும் என்ற நோக்கில் தான் பதவி துறக்கவில்லை என்று லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆண்ட்ரூ ஹேஸ்டி தெரிவித்தார்.

குடியேற்றக் கொள்கை தொடர்பில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நிழல் உள்துறை அமைச்சு பதவியை துறப்பதாக ஆண்ட்ரூ ஹேஸ்டி அறிவித்தார்.

அத்துடன், லிபரல் கட்சியை என்றாவது ஒரு நாள் வழிநடத்த விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

அவரின் இந்த கருத்து லிபரல் கட்சியின் தற்போதைய தலைவர் சூசன் லே பதவி விலக வேண்டும் என்பதை மறைமுகமாக வலியுறுத்துகின்றது என சிலர் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்நிலையில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஆண்ட்ரூ, தற்போதைய தலைவரை மாற்ற வேண்டும் என்பது எனது நோக்கம் அல்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

நான் நிழல் அமைச்சரவைப் பதவியைத் துறந்திருந்தாலும் கட்சியுடனான எனது பயணம் தொடரும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## குற்றச்செயல்கள் தலைவிரிப்பு!





விக்டோரியா மாநிலத்தில் இடம்பறும் குற்றச்செயல்கள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஓராண்டுக்குள் மாத்திரம் 6 லட்சத்து 38 ஆயிரத்து 640 குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இது 15.7 சதவீத அதிகரிப்பாகும்.

விக்டோரியா மாநிலத்தில் 6.9 மில்லியன் பேர் வாழ்கின்றனர் என்று 2024 ஆம் ஆண்டு சனத்தொகை பட்டியல் தெரிவிக்கின்றது.

இவர்களில் மீண்டும், மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை 0.078 சதவீதமாக உள்ளது. இளைஞர்கள் மத்தியிலான குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன.



## பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

ஆஸ்திரேலியா மற்றும் பப்புவா நியூ கினியா ஆகிய நாடுகளுக்கிடையிலான வரலாற்று முக்கியத்துவமிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் கன்பராவில் கைச்சாத்திடப்பட்டது.

ஆஸ்திரேலியாவிடமிருந்து பப்புவா நியூ கினியா சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு கடந்த மாதம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் ஆஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸியும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது மேற்படி பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், இவ்வொப்பந்தத்துக்கு பப்புவா நியூ கினியாவில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் அமைச்சரவையில் உடனடியாக ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

இதனையடுத்து ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்குரிய இணக்கப்பாட்டு ஆவணத்தில் இரு நாடுகளின் தலைவர்களும் கையொப்பமிட்டனர்.

இந்நிலையில் மேற்படி ஒப்பந்தத்துக்கு பப்புவா நியூ கினியா அமைச்சரவையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

'இந்த ஒப்பந்தம் "புவியியல், வரலாறு மற்றும் நமது பகிரப்பட்ட சுற்றுப்புறத்தின் நீடித்த யதார்த்தத்தின் அடிப்படையில் வரையப்பட்டது." - என்று பப்புவா நியூ கினியா பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஏதேனும் நாடொன்றின்மீது தாக்குதல் நடந்தால் இரு நாடுகளும் இணைந்து செயற்படுதல், சைபர் பாதுகாப்பு, படைகளில் ஆட்சேர்ப்பு உட்பட பல அம்சங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.


சுமார் 10 ஆயிரம் பப்புவா நியூ கினியா பிரஜைகள், ஆஸ்திரேலிய பாதுகாப்பு படைகளில் பணியாற்றவும் இந்த ஒப்பந்தம் வழிவகுக்கவுள்ளது.

**சிங்கள சினிமாவின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அடிகோலியவர்களே தமிழர்கள் தான். அவர்களில் ஒருவரே முன்னோடியான ஜோ தேவ் ஆனந்த் விளங்குகிறார். அண்மையில் அவர் அரச விருதுகளைப் பெற்றுள்ளார்.**

**1980களில் சிவாஜி கணேசன் நடித்த ‘பைலட் பிரேம்நாத்’ திரைப்படத்திற்கு இணை இயக்குநராக ஜோ தேவ் ஆனந்த் பணியாற்றினார்.**

**மேலும் ஜெய்சங்கர், ராதிகா மற்றும் நாகேஷ் நடித்த ‘ரத்தத்தின் ரத்தமே’ என்ற இலங்கையில் வெற்றிகரமான திரைப்படத்தையும் அவர் இயக்கியுள்ளார். இந்தத்திரைப்படம் இந்தியாவிலும் திரையிடப்பட்டு வெற்றியடைந்தமை குறிப்பிடத்தக்கது.**

# யாழ் திரைப்படத் துறையின் முன்னோடி
# ஜோ தேவ் ஆனந்த்







● ஐங்கரன் விக்கினேஸ்வரா

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியரான ‘ஜோ தேவ் ஆனந்த்’ (Joe Dev Anand) 1960களின் முற்பகுதியில் இலங்கைத் தமிழ்த் திரைப்படமான “பாச நிலா” திரைப்படத்தை (16மி.மீ.) இயக்கி வெளியிட்ட பெருமைக்குரியவர்.

பின்னர் கொழும்புக்கு வந்த பிறகு, கீதா, சுஜீவா, சுனேத்ரா மற்றும் சூகிரிகெல்லா ஆகியோருடன் இணைந்து இயக்கி சிங்களத் திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க வகையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

இலங்கையில் சிங்கள சினிமாவின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அடிகோலியவர்களே தமிழர்கள்தான். அவர்களில் ஒருவரே முன்னோடியான ஜோ தேவ் ஆனந்த் விளங்குகிறார். அண்மையில் அரச விருதுகளைப் பெற்றுள்ளார்.

திரைப்படக்கலை ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் இலங்கை நாடு சளைத்து விடவில்லை. சர்வதேசப் பரிசில்களைப் பெறுமளவுக்குப் பல சிங்களப் படங்கள் இங்கிருந்து உருவாகியிருக்கின்றன. இந்தச் சிங்களப் படத்தொழிலை நம்பியே பல கலைஞர்கள் நிலைக்கத் தொடங்கி விட்டார்கள். அது பெரிய தொழிலாகவே மாறிவிட்டது.

சினிமா என்பது ஓர் உன்னதக் கலைச் சாதனமாகும். ஏல்லாக் கலைகளையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் பிரபலமான கலையாகும். வேடிக்கையாக ஆரம்பித்த சினிமாக்கலை வேகமாக உலகமெல்லாம் பரவி அனைத்து மக்களையும் தற்போது ஈர்த்து நிற்கின்றது.

### பைலட் பிரேம்நாத் இணை இயக்குநர்:

சிவாஜி கணேசன் நடித்த ‘பைலட் பிரேம்நாத்’ திரைப் படத்திற்கு இணை இயக்குநராக இருந்தார். ஜெய்சங்கர், ராதிகா மற்றும் நாகேஷ் நடித்த ‘ரத்தத்தின் ரத்தமே’ என்ற இலங்கையில் வெற்றிகரமான திரைப்படத்தையும் அவர் இயக்கியுள்ளார், இது இந்தியாவிலும் திரையிடப்பட்டது.

தற்போது, 94 வயதில், பிரதமர் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, BMICH மண்டபத்தில் கடந்த ஜூன் மாதம் 13, 2025 அன்று அவர் நடித்த படங்களுக்காக சிறப்பாக கௌரவிக்கப்பட்டார்.

இலங்கைத் தமிழ் திரைப்படத் துறையில் கடைசியாக வாழும் சில ஜாம்பவான்களில் ஒருவராக இருந்து வருகிறார்.

### சிங்களத் திரைப்படத்தை இயக்கிய தமிழர் :

1950ஆம் ஆண்டிலேயே இலங்கையில் தமிழ்ப்படத் தயாரிப்பு முயற்சிகள் ஆரம்பமாகின எனலாம். இதுவரை அநேக தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டன என்று கூறலாம். ஆனாலும், 1950 இல் ஐம்பது படங்கள் வெளியாகிய நிலையில் அவற்றில் 36 படங்கள் மட்டுமே திரைக்கு வந்திருக்கின்றன என அப்போது கூறப்பட்டது.

இவ்வாறு வளர்ச்சிக் கண்ட ஈழத்து சினிமா இன்று பல்வேறு வகைகளில் வெற்றி கண்டுள்ளது எனலாம்.1947 ஆம் ஆண்டு தயாரிப்பாளர் எஸ். ஏம். நூயகம் என்பவரால் ‘கடவுனு பொறந்துவ ‘என்ற முதலாவது சிங்கள மொழி பேசும் திரைப்படம் தயாரிக்கப்பட்டது.

இலங்கைத் திரைப்படத்துறைக்கு அடித்தளம் இட்டவர் எஸ். ஏம். நூயகம் என்ற தமிழரே ஆவார். மேலும் இலங்கைத் தமிழ்த் திரைப்படத்துறை வரலாற்றில் இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்த் திரைப்படம் 1951 இல் வெளியான ‘குசுமலதா’ என்ற திரைப்படம் கருதப்படுகின்றது.

### ஈழத் திரைப்பட தனித்துவம்:

காலங் காலங்களாக தமிழ் நாட்டு திரைப்படத்தின் உள்ளடக்கம், ஆரம்ப வருடங்களில் இருந்த அளவிலேயே தான் உள்ளது. சித்தாந்தம் மற்றும் தர ரீதியில் வளர்ச்சியில்லை. இயக்குநர்கள் அனைவரும் பாட்டு, குழு நடனம், துரத்தல் சண்டை, பாலியல் கிளுகிளுப்பு இவைகளையே ஒரு ஜனரஞ்சக மான கேளிக்கை சாதனமாக செயற்படுத்தினர்.

ஆனாலும் இலங்கைத் தமிழ் சினிமா கலைஞர்களின் கலை நயத்தை வெளிப்படுத்தும் வகையில் வித்தியாசமான முறை யில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் சினிமாவாக வெளிவந்தன. இந்த வரிசையில் இலங்கைத் தமிழ் திரைப்படத் துறையில் கடைசியாக வாழும் சில ஜாம்பவான்களில் ஒருவராக ஜோ தேவ் ஆனந்த் இருந்து வருகிறார்.

தமிழக சினிமாவில் வியாபாரத்தனமே முக்கியமான அம்சமாக நிலைத்தது. இந்த நூற்றாண்டின் இறுதியில் விரிந்து பரவிய தொலைக்காட்சி தமிழ் திரைப்படத்துறையின் மற்றொரு விரிவாக்கமாக உறைந்து விட்டது. படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சிகள் போல தமிழ் திரைப்படங்கள் உருவெடுத்தன. இன்றும் அதே பாணியில் தொடருகின்றன. ஆனால் இவற்றுள் இருந்து மாறுபட்ட திரைப்படங்களாக இலங்கைத் தமிழ் சினிமாவின் வரலாறு அமைந்துள்ளது.






CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மிகப்பெரிய அளவில் நல்ல மாற்றங்கள் வரப்போகின்றன. பணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வரும். எதிர்கால சேமிப்புக்கு நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். மாணவர்களுக்கு எதிர்பாராத அளவு கல்வியில் உயர்வு உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் இரட்டிப்பாகும். கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். சனிக்கிழமை தோறும் சிவன் கோவிலில் இருக்கும் விநாயகரை வழிபடுங்கள்.

## கடகம்

கடக ராசிக்காரர்களை பொறுத்தவரை இந்த மாதம் படிப்படியான முன்னேற்றத்துக்கு பிள்ளையார் சுழி போடக் கூடிய மாதமாக இருக்கப் போகிறது. வேலையிலும் வியாபாரத்திலும் நீங்கள் நினைத்ததை விட உயர்ந்த இடத்துக்குச் செல்வீர்கள். எந்தப் பிரச்சினையை நினைத்தும் கவலை கொள்ள வேண்டாம். இறைவனின் பரிபூரண அருள் உங்களுக்கு இருக்கும். நீண்ட தூரப் பயணங்களில் போது ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தினந்தோறும் ஒரு வாயில்லா ஜீவனுக்கு உங்கள் கையால் உணவு கொடுங்கள், நன்மைகள் நடக்கும்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் வாழ்க்கைப் பயணம் முன்னேற்றப் பாதையை நோக்கி நகரும். வேலையிலும் வியாபாரத்திலும் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். புதிய முதலீடுகள் செய்யலாம். மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். திருமண வாழ்க்கையில் கூடுதல் கவனம் தேவை. செவ்வாய்க்கிழமை துர்க்கை அம்மன் வழிபாடு உங்களுக்கு நன்மையைத் தரும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களை பொறுத்தவரை இந்த மாதம் உங்களுடைய புத்தி கூர்மை அதிகரிக்கும். வேலையிலும் வியாபாரத்திலும் திறமையாகச் செயற்படுவீர்கள். பெரிய பெரிய பிரச்சினைகளுக்கு எல்லாம் கூட ஒரு நொடிப் பொழுதில் தீர்வு கொடுக்கும் திறன் உங்களிடம் வெளிப்படும். குடும்பம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் சரியாகி விடும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல மேம்பாடு இருக்கும். குழந்தைகளுடைய நலனில் நல்ல முன்னேற்றம் காணப்படும். மன நிம்மதி இருக்கும். சந்தோஷம் பெருகும். நரசிம்மர் வழிபாடு இந்த மாதம் உங்களை நல்வழிப்படுத்தும்.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்கள் இந்த மாதம் பலவிதமான தடைகளைக் கடந்து வந்து சாதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வேலையாக இருந்தாலும், வியாபாரமாக இருந்தாலும், பொறுமையாகச் செயற்பட வேண்டும். யாரையும் பகைத்துக் கொள்ளக்கூடாது. சில பேருக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் உண்டாகும். ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மனக் கவலையிலிருந்து விடுபட வெள்ளிக்கிழமை அம்மனை வழிபடுங்கள்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இம்மாதம் நினைத்த நல்ல காரியங்கள் எல்லாம் சிறப்பாக நடக்கும். உங்களுடைய பெயர் புகழ் அந்தஸ்து சமுதாயத்தில் உயர்ந்த இடத்துக்குச் செல்லும். நீண்ட நாள் வராத பணம் உங்கள் கையை வந்து சேரும். உங்களுக்கான சொத்து சேர்க்கையும் இருக்கிறது. உங்களால் முடிந்தால், பசியோடு இருக்கும் ஒரு நபருக்கு வாரத்தில் ஒரு நாள் சாப்பாடு வாங்கி கொடுங்கள்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இம்மாதம் நிறையச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். போட்டிகள் பொறாமைகள் எதிரிகள் தொல்லை இருக்கும். தேவையற்ற பிரச்சினைகள் உங்களைப் பின் தொடரும். கவனமாக இருந்து கொள்ளுங்கள். ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துங்கள். பணம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நன்மை நடக்கும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மனதுக்குப் பிடித்த நல்ல விஷயங்கள் நடக்கும். இம்மாதப் பண்டிகை உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத பண்டிகையாக அமையும். காதல் கைகூடும். திருமணம் வரை செல்லும். செலவுகள் கொஞ்சம் கட்டுக்கடங்காமல் செல்லும். பொறுப்புகள் அதிகரிக்கும். பண்டிகை நாட்களில், இயலாத இரண்டு பேருக்கு புத்தாடைகளை தானமாகக் கொடுங்கள், நல்லது நடக்கும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்கள் மன உறுதியோடு செயற்படுவீர்கள். துணிச்சல் வெளிப்படும். நீங்கள் எடுக்கும் முடிவு அவ்வளவு சரியானதாக இருக்கும். உங்களுடைய தொலைநோக்குப் பார்வையின் மூலமாக நிறையப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வீர்கள். வேலையிலும் வியாபாரத்திலும் எதிர்பார்த்ததை விட நல்ல முன்னேற்றம் இருக்கும். செவ்வாய்க் கிழமை தோறும் முருகனைக் கும்பிடுங்கள்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களைப் பொறுத்தவரை இந்த ஒக்ரோபர் மாதம் அயராது உழைக்க வேண்டும். சோம்பேறித்தனத்தோடு இருக்க வேண்டாம். கைபேசியை அதிக நேரம் பயன்படுத்தாதீர்கள். அடுத்தவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையில் மூக்கை நுழைக்க வேண்டாம். ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் தேவை. குறிப்பாக வீட்டில் இருக்கும் பெண்களுக்கு நிதானம் தேவை. தினமும் குலதெய்வ வழிபாடு செய்வது நல்லது.

## தனுசு

தனுசு ராசிக்காரர்கள் இம் மாதத்தில் நிறைய அலைச்சலான விஷயங்களைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். ஒரு வேலையை 10 முறை செய்ய வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் உண்டாகும். அலைச்சல் ஏற்படும். ஆனால் இறுதியில் வெற்றி உங்களுக்கு. பல பிரச்சினைகளுக்குப் பிறகு கடவுள் உங்களுக்கு வெற்றியை கொடுக்கப் போகின்றான். ஆகவே இந்த மாதம் நீங்கள் பிரச்சினைகளைக் கண்டு துவண்டு போய் உட்காரவே கூடாது.

## மீனம்

மீன ராசிக்காரர்களைப் பொறுத்தவரை இந்த மாதம் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். வேலையிலும் வியாபாரத்திலும் நல்ல முன்னேற்றம் காணப்படும். உறவுகளோடு இருந்து வந்த மனக்கசப்பு நீங்கும். தேவையற்ற பிரச்சினைகள் உங்களை விட்டு விலகும். மனைவியோடு வாக்குவாதம் சண்டை வேண்டாம். நிதி நிலைமை சீராகும். பண்டிகையைச் சந்தோஷமாகக் கொண்டாடக் கூடிய வாய்ப்புகளும் அமையும். நல்லது நடக்கும். மீனாட்சியம்மன் வழிபாடு உங்களை நல்வழிப்படுத்தும்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling?
# Sell your home for only
# 1% Commision.

**We get you the best price, without the big commission — only 1%**

Call for a **free**, **no-obligation** market appraisal. **No hidden costs no gimmicks.** We look after **property management** as well.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au
Level 10, 14 Mason St, Dandenong VIC 3175

Terms and Conditions apply*


PRESERVATIVES NO ADDED
MONOSODIUM GLUTAMATE NO ADDED
MSG
ATHAVAN
ஆதவன் ආතාවන්
PRODUCTS
PREMIUM PRODUCTS FROM
Jaffna
மிளகாய்த்தூள்
මිරිස් කුඩු
CHILLI POWDER
வல்லாரை பிட்டுமா
CENTELLA PITTU FLOUR
வறுத்த கறித்தூள்
ROASTED CURRY POWDER
மஞ்சள் தூள்
TURMERIC POWDER
தானிய சத்துமாக்கலவை
CEREAL NUTRIENT MIXTURE
யாழ்ப்பாணத்து கறித்தூள்
JAFFNA CURRY POWDER
Roasted
Jaffna
CURRY POWDER
WEIGHT
900g
prepared using
Traditional methods.
Distributed in Australia,
Sri Lanka, and other countries.
SRI AYYAPPA (PVT) LTD.
40 David St, Dandenong VIC3175
Australia.
+61 449 722 392 | +61 3 7049 9441
sriayyappa.ptyltd@gmail.com
SRI AYYAPPA GROUP (PVT) LTD.
Kaithady Weast, Kaithady, Jaffna,
Sri Lanka.
+94 74 158 3717
sriayyappa.lk@gmail.com
www.sriayyappa.com.lk
சிட்னி தொடர்புகளுக்கு: கோணேஸ்வரன் | 0450021469 | singamwaran@gmail.com